

ஞானச்சுடர்
சந்நிதியான் ஆச்சிரமம்
வைகாசி
2023
305ஆவது மலர்
ஓம்
முருகா
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# ஸ்ரீ செல்வச்சந்நிதி குறள்வழித் தோற்றம்



அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார்
அற்றாக அற்ற திலர்.

**பொருள் :** உலகப்பற்று அற்றவர் என்று சொல்லப்படுவோர் அவாவை விட்டவர்; மற்றவர்கள் அவர்போல உலகப்பற்று அற்றவரல்லர்.

(365)

அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா.

**பொருள் :** ஒருவனைக் கெடுக்கக்கூடியது ஆசை; ஆதலால், அவ் ஆசைக்கு அஞ்சி அதனைத் தடுப்பதே அறம்.

(366)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

**சின்னத்தங்கம்**



புத்தியைநீ நாட்டாதே புன்னெறியைச் சூட்டாதே
வெற்றியுனக் குண்டாகுஞ் - சின்னத்தங்கம்
விருப்பும் வெறுப்பும்விடு 13

எத்திக்கு மீசனடி இருந்தபடி யேயிருந்து
பத்திசெய்து பார்த்திடுவாய் - சின்னத்தங்கம்
பழிபாவ மில்லையடி 14

தத்துவப் பேயோடு தான்தழுவிக் கொள்ளாதே
சுத்தபரி பூரணத்தில் - சின்னத்தங்கம்
சுகித்துநீ வாழ்ந்திடடி 15

வித்தகம்நீ பேசாதே வேறொன்றை நாடாதே
செத்தாரைப் போல்திரிவாய் - சின்னத்தங்கம்
தெய்வம்நீ கண்டிடடி 16

மெத்தக்கதை பேசாதே மேன்மக்களை யேசாதே
சத்துருவும் மித்துருவுஞ் - சின்னத்தங்கம்
தானொன்றாய்ப் போகுமடி 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3  சுடர் - 305

**2023** **பொருளடக்கம்** **வைகாசி**


| | | |
|---|---|---|
| பூசலார் போன்றவர்களையே... | கே.எஸ். சிவஞானராஜா | 01 - 02 |
| இறைவனுடன் நேரில்... | மூ. சிவலிங்கம் | 03 - 05 |
| கந்தபுராண... | சி. கணபதிப்பிள்ளை | 06 - 09 |
| திருமூலர் தவமொழி | ஆ.தா.இ. ஜெயபாலன் | 10 - 12 |
| கதிர்காமம் அறிவும்... | கௌ. சித்தாந்தன் | 13 - 19 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 20 - 21 |
| எல்லாவித நலமும்... | இ. ஸ்ரீதரன் | 22 - 24 |
| வேதம் காட்டும் வழி | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 25 - 26 |
| அறஞ் செய விரும்பு | கு. சோமசுந்தரம் | 27 - 29 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 30 - 33 |
| ஆறுவகைச் சமயங்கள் | இராம. ஜெயபாலன் | 34 - 36 |
| ஆனந்த சாகரம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 37 - 40 |
| பாதயாத்திரை | சந்நிதியான் ஆச்சிரமம் | 41 - 43 |
| மாதோட்ட மன்னவனே... | திருமதி தி. இந்திரா | - 44 |


**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**


**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் சித்திரை மாத வெளியீடு

## வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரை:

2023 சித்திரை மாத (304ஆவது மலர்) ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரை, மதிப்பீட்டுரையினை ஆற்றுபவர்கள் தவிர்க்கமுடியாத காரணத்தால் சமூகமளிக்கவில்லை. அதன் காரணமாக அன்று சிறப்புப்பிரதி பெறும் நிகழ்வுக்கு வருகை தந்திருந்த இளைப்பாறிய ஆசிரியரும், புராண பௌராணிகரும், ஆன்மீக எழுத்தாளராகவும் விளங்கும் சரசாலையைச் சேர்ந்த திரு க. சிவசங்கரநாதன் அவர்கள் பேரவையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சித்திரை மாத ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரையினை ஆற்றினார்கள்.





அவர்கள் தம் ஆரம்ப உரையில் சந்நிதி வேலவனை தரிசித்துவிட்டு சிறப்புப்பிரதி பெறும் நோக்கில் வந்த எனக்கு இவ்வகையான பணியைச் செய்வதற்கு சந்நிதி வேலவனது அருள் கிடைத்ததையிட்டு மிகவும் மனமகிழ்வடைகின்றேன். இம் மலரின் வெளியீடானது அதுவும் 304 மாத காலம் ஓர் ஆன்மீகம் சார்ந்த மலர் தொடராக வெளிவருவது என்பது ஒரு சாதனையாகவே கருத வேண்டியுள்ளது. இம் மலரின் ஊடாக எத்தனையோ ஆன்மீக எழுத்தாளர்களின் கருத்தோடு கூடிய எழுத்தாற்றலை வாசிக்கும்போது சிலரது எழுத்தாற்றல் எம்மை வியப்பின் உச்சிக்கு இட்டுச் செல்கின்றது என்று கூறியதோடு மலரில் இடம் பெற்றிருந்த ஒரு சில ஆக்கங்களின் தன்மைபற்றி சபையில் உள்ள அடியார்களுக்கு எடுத்துக் கூறியதோடு தனது உரையை நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது உரையைத் தொடர்ந்து ஆச்சிரம சுவாமி அவர்கள் திரு க. சிவசங்கரநாதன் அவர்களுக்கு நன்றி கூறியதோடு மலர் மாதாமாதம் தொடராக வெளிவருவதில் உள்ள ஒருசில கருத்துக்களை சபையில் உள்ள அடியவர்களுக்கு விளக்கிக்கூறி தனது உரையை நிறைவு செய்து சிறப்புப்பிரதி வழங்கும் நிகழ்வில் ஈடுபட்டார்.

இறுதியாக ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளபடும் சமுதாயப் பணிகளின் வரிசையில் வறுமைக்கோட்டின்கீழ் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வுடன் இனிதே நிறைவுபெற்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

## வைகாசி விசாகத்தை ஒட்டிய வருடாந்த வைகாசிப்பெருவிழா

மேற்படி விழாவானது 2000ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு வருட வைகாசி மாதத்தில் வரும் விசாக நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு அதற்கு முன் பின்னாகவும் இப் பெருவிழாவை ஆரம்பத்தில் ஆலய வீதியில் நடாத்தி, காலப் போக்கில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது.

இவ் விழாவின் நோக்கம் சமய சமூகப் பணிகளில் முன்னின்று சேவை ஆற்றிய இலை மறை காயாக இருக்கும் பெரியோர்களை இனங்கண்டு அவர்களை சபைமுன் கௌரவிக்கவேண்டும் என்னும் முனைப்புடன் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் இவ் விழா ஆரம்பிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் வருடத்திற்கொருமுறையோ அல்லது இருவருடத்திற்கு ஒருமுறையோ சேவையாற்றுபவர்களை கௌரவிக்கும் வண்ணம் நட்சான்று பத்திரங் களோடு, விருது வழங்கி கௌரவிப்பது இவ் விழாவின் சிறப்பம்சம்.

இவ்வகையில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இருந்தும் விழா ஆரம்பித்த காலம் தொடக்கம் பல சேவையாளர்களை தெரிவுசெய்து கௌரவித்து வருகின்றது. இறுதியாக கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் இளைப்பாறிய அதிபரும், சமூகசேவையாளருமாகிய திரு ஆறுமுகம் சிவநாதன் அவர்களுக்கு "ஞான பண்டித ஆன்மீக வித்தகர்" என்னும் விருது வழங்கப்பட்டது. அவர்கள் ஆற்றும் சேவையைக் கருத்திற்கொண்டு "ஞான பண்டித" என்னும் அடை மொழியையும் சேர்த்து வழங்குவது வழக்கம்.

இவ் வருடமும் இவ் விழாவினை 09.06.2023 வெள்ளிக்கிழமை நடாத்துவதற்கு பேரவை தீர்மானித்திருக்கின்றது. இவ் விழாவை சிறப்புற நடாத்துவதற்கு ஒரு சில அன்பர்கள் ஆரம்பகாலம் தொட்டு அனுசரனையாக விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் இத் தருணத்தில் சந்நிதியான் ஆச்சிரமம் நன்றி கூறிக்கொள்வதில் பெருமிதம் அடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**Dr T. ஸ்ரீஸ்கந்தராசா**
(லண்டன்)

**பொ. கஜேந்திரகுமார்**
(யாழ்ப்பாணம்)

**ச. கந்தசாமி**
(தேவன் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)

**மா. நாகலிங்கம்**
(லக்ஷ்மி வெதுப்பகம், பத்தமேனி, அச்சுவேலி)

**க. அரியரத்தினம்**
(கதிர் தொலைத்தொடர்பு நிலையம், வல்வெட்டி)

**கா. அருந்தவராசா**
(பிரதானவீதி, தொண்டைமானாறு)

**சி. தங்கவேல்**
(கேம்பிரிட்ஜ் கல்வி நிறுவனம், நவிண்டில்)

**க. கிருபாகரன்**
(சந்தைவீதி, உடுப்பிட்டி)

**நா. சுந்தரம்**
(இளைப்பாறிய பிராந்திய நிர்வாக அலுவலர், உரும்பராய்)

**ந. நற்குணராசா**
(தாதி உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை)

**P. சாந்தருபன் G.S**
(சாருகாந் தொலைத்தொடர்பு நிலையம், கெருடாவில்)

**திருமதி இ. லோகநாதன்**
(இளை. பொது முகாமையாளர், மானிப்பாய்)

**Dr V. பாலகிருஷ்ணன்**
(கரவெட்டி)

**இ. கணேசலிங்கம்**
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)

**வீ. நடராசா**
(சாவகச்சேரி)

**சி. கஜன்**
(சண்டிலிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**S. இராசரத்தினம்**
(இளை. பிரதேச அத்தியட்சகர், நீர்வேலி)
**த. விக்னேஸ்வரன்**
(தங்கராசா நகை மாளிகை, யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(சுந்தரம் பிறதேர்ஸ் மருந்துக்கடை, திருநெல்வேலி)
**K. அருள்வேல்**
(விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)
**ஆ. குலேந்திரநாயகம்**
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)
**செ. கஜேந்திரன்**
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
**ஐ.கோ. சந்திரசேகரம்**
(யாழ்ப்பாணம்)
**செல்வி T. பெரியதம்பி**
(முன்னாள் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை)
**செல்வி ரதிவதனி**
(மாயக்கை, தம்பசெட்டி)
**Dr P. சிவபாலன்**
(உரும்பராய்)
**மாணிக்கம் குட்டித்தம்பி**
(வல்லியாவத்தை, கரணவாய்)
**திருமதி சீ. ஆதவன்**
(வல்லிபுரக்கோவில் வீதி, புலோலி)
**சாவித்திரி அருணாசலம்**
(தும்பளை, பருத்தித்துறை)
**பேரின்பபாலசுப்பிரமணியராசா கபிலேஷன்**
(அரசவீதி, உரும்பராய் கிழக்கு)
**ஐ. புவனேஸ்வரன்**
(அச்சுவேலி)
**நி. ஜெயந்தன்**
(மங்கை ஸ்ரோர்ஸ், நீர்வேலி)
**சு. சந்திரலிங்கம்**
(ஆனைக்கோட்டை)
**பாலகுரு விமலேந்திரன்**
(குரு பிறிண்ரேஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொ. கந்தையா**
(புருடிலேன், அரியாலை)
**செ. கிருஷ்ணராஜா**
(கலட்டி வீதி, கோண்டாவில்)
**வை. சிற்றம்பலம்**
(தேவி வாசம், கொக்குவில்)
**மா. தங்கவேல்**
(சுண்ணாகம்)
**வரதலிங்கம் செல்வமோகன்**
(மோகன்கடை, ஆவரங்கால்)
**திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை**
(பத்தமேனி, அச்சுவேலி)
**தா. தர்மலிங்கம்**
(கொக்குவில்)
**த. கணேசலிங்கம்**
(தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ், ஆனைக்கோட்டை)
**ம.செ. சபாநாயகம்**
(மாலிசந்தி, கரவெட்டி)
**K. வேணுகோபாலு**
(வேணி இல்லம், புலோலி)
**S. மிகிந்தலா**
(கரவெட்டி)
**திருமதி S. உமாரதி**
(மங்கை இல்லம், உடுப்பிட்டி)
**செ. ஸ்ரீதரன்**
(விமலவாசா, உச்சில் ஒழுங்கை, கரவெட்டி)
**சி. மதியழகன்**
(திக்கம், அல்வாய்)
**ஜெகநாதன் ஜனனி**
(யாழ்ப்பாணம்)
**ஐ. சிவஞானம்**
(கமலவதி, கரவெட்டி)
**அ. சின்னத்தம்பி**
(மாய்க்கிராயன், துன்னாலை)
**கதிரவேலு சதாசிவம்**
(அந்திரான், கரவெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**த. முருகானந்தா**
(பிரம்படிலேன், கொக்குவில்)
**A.T. கதிரவேல்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**த. யாழினி**
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
**ஆறுமுகம் மயில்வாகனம்**
(இணுவில் கிழக்கு)
**வே. பாண்டியர்**
(கைதடி தெற்கு)
**வ. இராசையா**
(இருபாலைவீதி, கோப்பாய்)
**சோ. இராசலிங்கம்**
(ஆவரங்கால் கிழக்கு)
**சி.க. இராசரெத்தினம்**
(பத்தமேனி, அச்சுவேலி)
**K. குலரெட்ணம்**
(நவாலி வடக்கு, மானிப்பாய்)
**சி. பாலபாரதி**
(கற்கோவளம், பருத்தித்துறை)
**சு. பானுஜா**
(துன்னாலை, கரவெட்டி)
**ச. தெட்சணாமூர்த்தி**
(கோண்டாவில்)
**ஜெயசந்திரபோஸ் இந்திராணி**
(அச்சுவேலி)
**க. கௌரீஸ்வரி**
(அரியாலை)
**ஆ. வேலாயுதம்**
(கம்பர்மலை)
**க. சந்திரகுமார்**
(நீர்வேலி)
**மு. பிரதாஸ்**
(மல்லாகம்)
**க. பொன்னுச்சாமி**
(கரவெட்டி)
**க. ஆறுமுகநாதன்**
(வட்டுக்கோட்டை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூசலார் போன்றவர்களையே நாம் உருவாக்குதல் வேண்டும்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

"உன்னை நீ தேடு
உனக்குள் அவனைத் தேடு"

"உன்னுமுளது! ஐயமிலது!
உணர்வாய் ஓவாது
மன்னுபவம் தீர்க்கும் மருந்து"

இறைவன் சகலரிடையேயும் நீக்கமற நிறைந்து இருக்கின்ற சௌபாக்கியத்தை யாம் பெற்றிருப்பதனாலேயே ஒவ்வொரு மனிதனும் பெருமதியோடு வாழ்கின்றான்.

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்பது தாரக மந்திரமாகும். ஆதலாலேயே இறைவன் மகிழ்ந்து சிரிக்கின்றான் குழந்தை வடிவிலே!! பெரியவர்கள் பெரும்பாலும் மங்களகரமாகவும், மனோலயமாகவும் சிரிப்பதில்லை. காரணம் நெஞ்சத்தில் வச்சுரமாகப் புத்தி இழையோடியிருப்பதனாலேயே ஆகும். எப்படியென்றால் பதவியிலும் பட்டங்களிலும் புகழ வைப்பதிலும் பொன் பொருள் தேட்டங்களிலும் அதீத ஆசை வைத்திருப்பதனாலேயாம். நாம் மாடியிலும் கோடியிலுமே கவனம்! அண்மையில் ஒரு படித்த பிரபல்யமானவர் எல்லாப் பதவிகளிலும் வகித்த பின்னரும் கூட இப்போது வெளிநாட்டில் தூதுவர் பதவிக்கு ஆசைப் பட்டுக்கொண்டிருக்கின்றார். வயதோ வட்டுக்குள் போய்விட்டது. சுடலை ஞானம் வரவேண்டிய நேரத்தில் இளமை திரும்புகின்ற மேதாவிகளையே எம்மால் பார்க்கமுடிகிறது. வயது போனவர்களையும் சினிமாவில் நடிக்கக் கூப்பிடுவார்களாக இருந்தால் நம் நாட்டில் பலர் போட்டி போட்டுக்கொண்டு முன்னுக்குப் போவதை நாம் எதிர்பார்க்கலாம். காரணம் ஆசைகளை விட்டுவிட யாருக்கும் மனமுமில்லை. மார்க்கமும் தெரியவில்லை.

சினிமாவே இந்தியாவையும், இலங்கையையும் சீரழிப்பதில் முக்கிய பங்காற்றுகிறது என்பதனை பல ஒழுக்கவாதிகள் எச்சரிக்கை செய்கிறார்கள். ஆனால் ஏனையவர்கள் பகிரங்கமாகச் சினிமாவைத் தனிமைப்படுத்த விரும்பாதது கவலைக்கும் கவனத்திற்கும் உரியதாகும். ஒரு பக்கம் காமப்பொருளையும், மறுபக்கம் கடவுள் பொருளையும் வைப்பதாகவே சினிமாப் பதார்த்தங்களும், சினிமாப் பாத்திரங்களும் படைக்கப்படுகின்றன. தலைவனும் தலைவியும் ஆடிப் பாடித் தொட்டுத் தொடர்ந்து கொஞ்சிக் குலாவி சுருதிகூட்டுவனவாகவே படங்கள் இரம்மியம் சேர்க்கப்படுகின்றன. கட்டியணைக்கும் காட்சி, முத்தமிடும் காட்சி, குளிக்கும் காட்சி, பலாத்காரக் காட்சிகள் மட்டுமல்ல கொலை செய்யும் காட்சிகளும் அதைச் செய்வதற்கான யுக்திகளும் வலு கச்சிதமாக படம்போட்டுக் காண்பிக்கப்படுகின்றன. அதைவிட நாடகங்களில் கருக்கலைப்புக்கள் செய்ய விளைகின்ற பாங்கினையும், பெண்களை சிறுமைப்படுத்துகின்ற, கொடுமைப்படுத்துகின்ற கொடூரங்களையும், அல்லாமலும் ஆண்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டந்தட்டுகின்ற பெண்களையும் பெரிதுபடுத்திக் காட்டுவது ஏற்புடையதாகாது. இவையனைத்தும் பன்னாடைகள்போல, நல்லதையெல்லாம் வெளியேற்றிவிட்டு, கஞ்சல் குப்பைகளையே நாம் சேகரித்து வைத்திருக்கின்றோம். உடலோ கெட்டுவிட்டது. உள்ளத்தையாவது கெடாமல் வைத்திருக்க வேண்டும். இறைவன் வீற்றிருக்கும்படியாகப் பூசலார் கட்டிய மனக்கோவில்களை நாமும் கட்டினால் கும்பாபிஷேகத்துக்கு அவன் வரமாட்டானா? எனவே உள்ளத்தையே தூய்மை செய்வோம்.

ஒவ்வொரு நாளும் கோவில்கள் கட்டப்பட்டுக்கொண்டிருந்தால் சமயம் வளரும் என்று யாரோ பெரியவர்கள் சொல்லிவிட்டதைப் போல இலங்கையில் இடித்து இடித்துக் கோவில்களைப் பெரிதாக்கிக் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். இதனால் குழப்பங்களும் கொடூரங்களுமே நாட்டிலே தோன்றிவிடப் போகிறதோவென அச்சப்படவேண்டியுள்ளது. அரசும் நாமும் கோவில்களைக் கட்டிக்கொண்டிருக்கும்போது நாட்டிலேயும் வீட்டிலேயும் பிரச்சினைகளும் கொடுமைகளும் நோய்களும் விடுபட்டு ஓடவேண்டுமல்லவா? எனவே பௌதீக வளங்களினால் மட்டும் நாம் சமயத்தை வளர்த்துவிட முடியாது. அகவழிபாடே முதலில் சிறந்ததாகும். “உள்ளமே பெருங் கோவில்”. அதுவே நமக்கு இப்போதைய தேவை. பூசலார் கட்டிய மனக்கோவிலுக்குத்தான் இறைவன் முதலில் சென்ற வரலாற்றினை நாம் படித்திருக்கின்றோம். கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டிக் கோயிலைப் போட்டா போட்டியாகக் கட்டுவதைத் தவிர்த்து உள்ளதையும், உள்ளத்தையும் பேறாக்குவோமாக இருந்தால், உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவதாக இலங்கை இனியாவது இலங்கும்!

## பிடிசாம்பரானதையா

உருகாத மனம் கூட உருகிவிடும்
முருகா எனும் நாமம் கேட்டால்
சருகாக மாறி நாம் சஞ்சலங்கள் கொள்ளாமல்
அருகாக யான் வந்தால் அணைப்பாயா சொல்முருகா.

செருக்குடனே யான்திரிந்து செகத்தினில் வாழ்ந்துவிட்டேன்
அருவருப்புக் கொள்ளாமல் அன்புநீ தருவாயா
விருப்புடனே தாள்பணிந்தால் விலகியே நீ செல்வாயா
பருக்கனென நினைக்காமல் பாதம் பற்ற விடுவாயா?

ஒரு உயிர் இருக்கையிலே ஒன்பதும் திறந்ததையா
ஒரு ஓட்டை அடைக்கவே உலகமே இருண்டதையா
கரு வினில் வந்த உயிர் காணாமல் போனதய்யா
பேருண்டு எனக் கொள்ளாமல் சவமாய் பார்த்தாரய்யா.

வாரும் சவம் பார்ப்போம் என்றுசொல்லி வந்தாரய்யா
ஊரும் பேரும் தெரியாதார் எனை எடுத்துச் சென்றாரய்யா
விருப்புடன் இல்லாமல் விறகு எனை எரித்ததையா
பேர் சொல்லி வாழ்ந்த உடல் பிடிசாம்பரானதையா.

-பொ. பாலேஸ்வரன்-

*புரியாத கவிதையும் கலையாத கனவும் அழகுதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனுடன் நேரில் தொடர்புகொண்ட இறையருட் செல்வர்கள் வரிசையில் குமரகுருபர சுவாமிகள்

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

பாண்டிய நாட்டின் திருவைகுண்டம் என்னும் திருவூரில் சைவ வேளான்குடியில் வாழ்ந்த சண்முகசிகாமணிக்கவிராயர் சிவகாமி அம்மையாரின் அருந்தவப் புதல்வராக அவதரித்தவர். குமரகுருபர சுவாமிகள் இவர் பிறந்து ஐந்து வயது வரை வாய் பேசாத ஊமைப் பிள்ளையாகவே வாழ்ந்தார். இதனால் பெற்றோர் மாறாத பெருங் கவலையுடன் இறையருளை நாடினர். தமது கவலையை நீக்குமாறு பல ஆலயங்களுக்குத் தமது பிள்ளையையும் எடுத்துச் சென்று வழிபட்டனர். கடைசியாக திருவருள் கைகூட்டத் திருச்செந்தூர் முருகப் பெருமானின் ஆலயஞ் சென்றனர். பிள்ளையை முருகப்பெருமானின் திரு முன் கிடத்தி விட்டுத் தமக்கு அருள்பாலிக்குமாறு வேண்டி அழுது புலம்பினர்.

இறையருட் சித்தமும் முருகப்பெருமானின் பெருங்கருணையும் சைவ உலகின் விடிவிற்கான அருட்பாக்களும் கிடைக்கவேண்டிய நியதியும் ஒன்று கூடியது. முருகப்பெருமானின் அருள் ஊற்று அவர் மீதே சேர வேண்டிய பாமாலையாக வெளிவரத் தொடங்கின. எவரும் எதிர்பாராத அற்புதமாக அமைந்தது. ஐந்து வயது வரை ஒரு எழுத்தையேனும் உச்சரிக்க முடியாதவர் ஊமைத் தன்மை நீங்கத் தண்ணீர் ஊற்றெடுப்பது போலவும் மடைதிறந்த வெள்ளம் போலவும் பாடல்கள் சொற்சுவை பொருட்சுவை சேர் பக்தி மாலையாகவே "கந்தர் கலிவெண்பா" என்னும் பதிகத்தைப் பாடி அருளினார். யாவரும் அதிசயித்தனர். திருச்செந்தூர் முருகன் தன் புகழை ஐந்து வயதான ஊமைப் பிள்ளை மூலம் பாட வைத்த அற்புதம் யாவராலும் போற்றப்பட்டது. அன்று முதல் இவர் "குமரகுருபரர்" என அழைக்கப்படலானார்.

சைவசித்தாந்த சாத்திரமாக விளங்கும் குமரகுருபரர் இலக்கண இலக்கியங்களையும் ஞான சாத்திரங்களையும் இறைவனின் திருவருளால் இலகுவில் கற்றறிந்தார். இதனால் பக்தி வைராக்கியங்கள் இவரிடம் தானாகவே குடிகொண்டன. பக்திமேலிட ஆலயங்களைத் தேடி வழிபட்டார். திருச்செந்தூர் முருகனின் ஆணைப்படி வடதிசை நோக்கிச் சென்றார். செல்லும் வழியில் மதுரை மீனாட்சி அம்மனால் ஈர்க்கப்பெற்றார். மீனாட்சி அம்மன் ஆலயத்தில் தங்கி வழிபட்டதுடன் அம்பாளின் பக்தி மேலீட்டினால் மீனாட்சி அம்பாள்மீது பிள்ளைத்தமிழைப் பாடினார். குமரகுருபரர் தான் பாடிய பாடற் தொகுதியை அவ்வூர் மன்னன் திருமலை நாயக்கர் முன்னிலையில் அவ்வாலயத்திலேயே அரங்கேற்றவுஞ் சித்தங்கொண்டார். யாவற்றையும் இறையருள் கைகூட்டியது. அன்னை மீனாட்சி மன்னன் திருமலை நாயக்கரின் கனவிற்தோன்றி குமரகுருபரர் இயற்றிய பிள்ளைத்தமிழ் நூலை தமது ஆலய மண்டபத்திற் பாடி அரங்கேற்றுமாறு மறைந்தருளினார்.

*மனம் அழகானால் வாழ்க்கையும் புவனமாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த நாளில் ஆலய மகாமண்டபத்தில் மன்னனின் ஏற்பாட்டில் மதுரை மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ் அரங்கேற்றம் தொடங்கியது. பிஞ்சு மொழிப் பாலகனின் பக்தியான பைந்தமிழ்ப் பாடலைக் கேட்கவென பல்லாயிரம் மக்கள் மண்டபத்தில் குழுமியிருந்தனர். குமரகுருபரர் பாடத் தொடங்கியதும் மண்டபத்தில் அமைதி நிலவ யாவரும் ஆர்வத்துடன் கேட்டின்புற்றனர். அரசனும் இதுவரை கேட்டிராத மழலை மொழியில் பாடும் பாடலைச் சபை முன்பாக இருந்து தம்மை மறந்து கேட்கிறார். அச்சமயம் குமரகுருபரர் பெண்ணின் வருகைப் பருவத்திற்குரிய பாடலான "கொடுக்கும் கடவுட் பழம்பாடற் தொடையின் பயனே" என்ற தொடரிற் பாடி அதன் பொருளையும் விளக்குகிறார். அச்சமயம் அழகிய சின்னஞ்சிறிய சிறுமியொருத்தி பட்டுப்பாவாடையழகும் மின்னும் அணிகலன்களின் அழகும் ததும்பத் தனது பிஞ்சுப் பாதங்களால் மெல்ல மெல்ல அசைந்தாடிக் குறுநடை நடந்த வண்ணம் மன்னனின் மடிமீதமர்ந்து பாடற்பயனைக் கேட்டின்புற்றாள்.

குமரகுருபரரின் விளக்க உரை நிறைவில் அச்சிறுமி எழுந்து மன்னனின் கழுத்திலிருந்த நவமணிமாலையொன்றை எடுத்துக்கொண்டு குறுநடை நடந்து சென்று குமரகுருபரருக்கு அணிந்ததும் மறைந்தருளினார். அச்சபையிலிருந்த யாவரும் அச்செயலைக் கண்டதும் அன்னை மீனாட்சியைப் போற்றி வழிபட்டனர். மீனாட்சி அம்பாள் பக்தனின் கனிவான பாடலை நேரில் வந்து கேட்டின்புற்றதும் பாடலைத் தாமே அங்கீகரித்தது போலப் பரிசில் வழங்கியதையும் மன்னன் பெருமையாகக் கருதினான். குமரகுருபரரின் பெருமையை நிலைநாட்ட முன்வந்து தாமும் தக்க பரிசில்களை வழங்கி அன்னையின் திருவிளையாடலை வியந்தான்.

குமரகுருபரர் மீனாட்சி அம்பாளின் அற்புதத்தை வியந்து அம்பாள்மீது மதுரைக் கலம்பகம், மீனாட்சியம்மை, இரட்டைமணிமாலை, நீதிநெறி விளக்கம் ஆகிய பாடல்களைப் பாடினார். தமது பணி நிறைவில் குமரகுருபரர் வேறு ஆலய தரிசனத்திற்காகப் புறப்பட்டார். இவர் திருவாரூர் சென்று இறைவன்மீதும் பாடி மகிழ்ந்தார். குமரகுருபரர் தான் இறையருட்சக்தி பெற்றாலும் தாம் சிறுவனாக இருந்ததால் ஒரு சற்குருவை நாடி அவரிடம் குருஉபதேசம் பெற எண்ணினார். இறையருட் சித்தப்படி அவ்வூரில் வாழ்ந்த மாசிலாமணித் தேசிகர் என்பவரிடம் குரு உபதேசம் பெற்றார். குருவின் ஆணைப்படி சிதம்பரத்தை நாடிச் சென்றார். சிதம்பரத்தில் நடராசப் பெருமான் உடனுறையும் அன்னை சிவகாமி அம்பாள்மீது பாடல்களைப் பாடினார். தொடர்ந்து காசிக்குச் சென்றார். காசிக்குச் சென்றதும் அங்கு பெருமான்மீது பாடல்கள் பாடி மகிழ்ந்தார். பெருமானின் ஆசியுடன் துண்டி விநாயகரையும் வழிபட்டார். குமரகுருபரர் காசியில் தங்கி அறப்பணிகள் செய்ய ஆவலுற்றார். அவ்விடத்தில் மடம் கட்டுவதாயின் அவ்வூர் மன்னனிடம் அனுமதி பெற வேண்டும். மன்னனுடன் உறவாடும் நோக்கில் வடமொழி கற்றாக வேண்டும். வடமொழியை இலகுவிற் கற்பதன் பேரில் தமக்கு உதவுமாறு சரஸ்வதி தேவியை வேண்டி "சகலகலாவல்லிமாலை" என்னும் பதிகத்தைப் பாடினார். சரஸ்வதியின் பேரருளால் வடமொழியை இலகுவிற் கற்றார். வடமொழி அறிவுடன் காசி மன்னனுடன் உறவாடித் தமது அறப்பணிக்கு ஆதரவு தேடினார். காசி மண்டலத்தில் திருக்கேதாரநாதர் திருத்தலம் முகமதியரால் மறைக்கப்பட்டு கேதாரலிங்கத்தையும் மறைத்தனர். இறையருளால் மறைந்த இலிங்கத்தை

*தளராத இதயம் உள்ளவனுக்கு இவ்வுலகில் முடியாதது என்று எதுவுமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியாக்கி ஆலயத்தைப் புணர்நிர்மானஞ் செய்தார். இதனால் கேதாரநாதர் திருத்தலத்தைச் சிறப்பாக வழிபட உதவினார். மேலும் காசியில் சமய வளர்ச்சியின் பேரில் தென்னாட்டினரால் முதன் முதல் காசியில் சைவ மடம் ஒன்றை நிறுவிச் சைவநெறியுடன் தமிழ் பிரகாசிக்க உதவினார். இதன் பேறாக இந்த மடத்தில் புராணபடனத்தை ஏற்பாடு செய்தார். வடமொழி பேசுவோரின் நன்மை கருதி வடமொழிமூலம் புராணபடனம் ஏற்பாடானது.

நீண்டகாலம் காசியில் வாழ்ந்து சைவத்தையும் தமிழையும் நிலைநாட்டிய பெருமை குமரகுருபர சுவாமிகளுக்கே கிடைத்தது. இன்றுவரை சைவ மக்கள் போற்றும் "சகலகலா வல்லிமாலை" நவராத்திரிக் காலத்தை அலங்கரிக்கிறது. மேலும் தென்னகத்தினர் எவரும் சாதிக்க முடியாதவாறு காசியில் சைவமடம் அமைத்துச் சைவமும் தமிழும் வளரவும் புராணபடன வைபவத்தையும் ஏற்பாடு செய்த குமரகுருபர சுவாமிகளின் பெருமையை உலகறியச் செய்த திருச்செந்தூர் முருகப்பெருமானை தமிழ்த் தெய்வம் என்ற பெருமையுடன் போற்றுவோமாக.

## வாரி அருள் சொரிவாயே!

*பல்லவி*

நல்லூரில் வீற்றிருக்கும் நாயகனே! எங்கள்
நலங்களைக் காத்தருளும் நற்றமிழ்க் குமரனே!
(நல்லூரில்)

*அநுபல்லவி*

வல்வினை தீர்த்திடும் வடிவேலனே!, அண்டி
வணங்கிடும் அடியவர்க்கு வரங்களைத் தருபவனே!
(நல்லூரில்)

*சரணம்*

தொல் புகழ் மிக்க ஒரு நகரினிலே, பக்தி
துலங்கிடும் தூய்மை மிகும் பதியினிலே,
பல்லோரும் ஏற்றிடவே பவனி வருவாயே!
பைந்தமிழ்க் காவலனே சிந்தைகளை ஈர்ப்பாயே!
(நல்லூரில்)

கல்லும் கசிந்துருக, கண்களும் குளமாகக்
கவிமாலைகள் சூடி வாழ்த்தித் தொழுவோமே!
வல்லவனே! வந்து அருட்காட்சி தருவாயே!
வள்ளலாய் இங்கு வாரி அருள் சொரிவாயே!

-கி. குலசேகரன்-

*வெற்றி என்பது புத்திசாலிகளுக்கு மட்டுமல்ல. முன்னேறத் துடிக்கும் உழைப்பாளிக்கும் சொந்தம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கிய கலாநிதி, பண்டிதமணி

# சி.கணபதிப்பிள்ளை அவர்கள் வழங்கிய

# அணிந்துரை (கந்தபுராணம்) (11.05.1981)

கந்தபுராணம் கம்பராமாயணத்துக்கு ஒரு நூற்றாண்டு முந்தியது; சுப்பிரமணியக் கடவுளின் திருவருள் கைவந்த கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் அருளியது; திருமுறை வரிசையில் வைத்துப் போற்றுந்தகைமையது.

கந்தபுராணத்துக்குப் பிறப்பிடம் கந்தசுவாமியின் திருவருள் பெருகுங் காஞ்சிமாநகரமே யாயினும், அதனைப் பிள்ளைமைப் பருவத்திலிருந்தே, பேணுகிற முறையிற் பேணி வளர்த்தெடுக்கும் தவவிசேடம் படைத்தது ஈழம், சிறப்பாக யாழ்ப்பாணம்.

ஈழத்தில் கோயில்கள் தோறும், சுவாமி சந்நிதியில் சந்நிதி விரோதமின்றி, மிக்க பயபக்தியுடன், புராணபடனம் நிகழ்த்தும் முறை, வேறு எங்கும் காணாதது. இம்முறையின் வரலாறு சிந்திக்கற்பாலது;

ஈழத்தின் சிரத்தானம் யாழ்ப்பாணம். இதன் ஆதிப்பெயர் "மணற்றி". இதனை முதன் முதலாண்ட தமிழரசன் யாழ்ப்பாணன். பாணருக்கு யாழ் கைவந்தது. யாழ்ப்பாடி என்றும் அவன் பெயர் வழங்கும். அவனது இயற்பெயர் வீரராகவன்.

அந்தக்கவி வீரராகவன் வேறு; இந்த வீரராகவன் வேறு. கவிவீரராகவன் அந்தகன் (குருடன்) பிற்காலத்தவன்.

ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணத்தை அரசாண்ட காலத்தில், பரராசசேகரனைப் பாடிப் பரிசில் பெற்றவன் அந்தக் கவிவீரராகவன்.

யாழ்ப்பாடிக்குப்பின், சிறிது காலம் யாழ்ப்பாணம் அரசின்றியிருந்தது. அந்த இடை வெளிக் காலத்தின் பின், யாழ்ப்பாணத்தை அரசு செய்தவர்கள் ஆரியச்சக்கரவர்த்திகள். பரராஜசேகரன் ஆரியச்சக்கரவர்த்திகளுள் ஒருவன்.

மணற்றியை யாழ்ப்பாணமாக்கிய யாழ்ப்பாடியின் வரலாற்றை ஆராய்வது ஒரு அளவுக்கு யாழ்ப்பாணச் சரித்திரத்தின் மூலவேரைக் கண்டு பிடிப்பதாயிருக்கும். அந்த மூலவேர், புராணபடன முறையின் தோற்றத்தைக் காண வழிசெய்வதாயுமிருக்கும்.

முதலில் யாழ்ப்பாணனான யாழ்ப்பாடிக்கும் மணற்றிற்கும் உள்ள தொடர்பை விசாரிப்போம்.

வீரராகவன் எனப் பெயரிய யாழ்ப்பாணன், கண்டியிலிருந்து அரசாண்ட அரசன் ஒருவனை இன்னிசையால் இனிமைசெய்ய, அக்கண்டி அரசன் உவந்து யாழ்ப்பாணனுக்கு

*செய்வதை விரும்பிச் செய்வதைவிட, நம்பிக்கையோடு செய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளித்த பரிசில் மணற்றி; இம் மணற்றி கண்டியரசனுக்கு மாதாவழிச் சொத்து. மாதா மாருதப்பிரவல்லி, விக்கிரம சோழன் புதல்வி; மாமுகத்தி. மா - குதிரை.

இவள் பல தலங்களுக்கும் யாத்திரை செய்து, இறுதியாக நகுலாசலம் எனப்படும் கீரிமலைக்கு வந்து சேர்ந்தாள். அங்கே தவஞ்செய்துகொண்டிருந்த கீரிமுக முனிவரான நகுலமுனிவரின் அநுக்கிரகம் பெற்று, கீரிமலைத் தீர்த்தத்தில் மூழ்கியதும் மாமுகம் விடுபட்டு, அழகிய முகத்துடன் கூடிய அரசிளங்குமரியாயினாள்.

மாமுகம் விட்டதன் ஞாபகமாக மாவிட்டபுரத்தை அமைத்து, கோயிலெடுத்துக் கோயிலில் என்றும் இளையோனான திருமுருகனைப் பிரதிட்டை செய்தாள்.

முக அழகியாய் மாறிய அவளைப் பாலசிங்கன் என்னும் அரசன் மணந்து பெற்ற புதல்வனே கண்டியரசன்.

இனி, மணற்றிக்கு வருவோம். பல வேறு மக்களை அழைத்துவந்து, குடியேற்றஞ் செய்து மணற்றியை ஆளத்தொடங்கினான் யாழ்ப்பாடி. அழைத்து வந்தவர்களுள் முக்கியஸ்தர் ஒருவர்; அவர் கச்சிக்கணேசையர். மேலும் மிக மிக முக்கியமான பொருள் ஒன்று குடியேறியது. அது, கந்தபுராணம்.

கச்சிக்கணேசையரும், யாழ்ப்பாடியும், கச்சியப்பசிவாசாரியாரோடு உடன் படித்தவர்கள் ஆகலாம். அன்றி, கந்தபுராண அரங்கேற்றத்திற் பங்குபற்றியிருப்பார்கள் என்றும் ஊகிக்கலாம். கச்சியப்பசிவாசாரியார் காலத்திலேயே கந்தபுராணம் யாழ்ப்பாணத்துக்கு வந்துவிட்டது.

இங்கே கோயிற் சந்நிதியிற் புராணபடனம் நடத்தவேண்டியிருந்ததால், சந்நிதி விரோத மின்றிப் புராணபடனம் நடத்தும் முறையை, கச்சிக்கணேசையரும் யாழ்ப்பாடியும் கலந்துரையாடி வகுத்திருக்கலாம்.

அரியாலைச் சித்திவிநாயகர் ஆலயத்திலேதான் முதன்முதல் இந்தப் புராணபடனத்தைக் கச்சிக்கணேசையர் ஆரம்பித்தார் என்று சொல்லுவதுண்டு.

புராணங் கேட்போரும், சந்நிதி விரோதமின்றி விரதம் மேற்கொண்டு, வேறு புலமின்றிக் கேட்குந்திறமும் விதிக்கப்பட்டது.

ஆண்களும் பெண்களும் கோயிற் சந்நிதியிற் புராணங்கேட்டார்கள். சிறப்பாகப் பெண்கள் அனைவரும் புராணங் கேட்டவர்களாயிருந்தார்கள்.

தமிழரசர்களுக்குப்பின் பறங்கியர் ஒல்லாந்தர் காலத்தில் கோயில்களனைத்தும் தரைமட்டமாயின. பெண்களின் மனக்கோயில்களை இடிக்க அவர்களால் முடியவில்லை. அங்கே கந்தபுராணம் கோயில் கொண்டிருந்தது.

"இந்தியாவிலே வித்துவான்கள் சைவகுருமார் முதலியோருள்ளும் கந்தபுராணம் முதலியன அறிந்தோர் சிலர். இத்தேசத்திலோ பெண்களுள்ளும் அவை அறியாதார் இலர்" என்கின்றார் நாவலர் பெருமான். (யாழ்ப்பாணச் சமய நிலை 72ஆம் பக்கம்)

பெண்களின் உதிரத்தில் கந்தபுராணம் இரண்டறக் கலந்திருந்தது. அவ்வாறாய உதிரத்தில் உதித்தவரே நாவலர் பெருமான். "மேன்மைகொள் சைவநீதி" என்ற கந்தபுராணத் தொடர், நாவலர் பெருமானின் குறிக்கோள் மந்திரம்.

*நீ வெற்றிபெறும் பொழுதெல்லாம் உன் முதல் தோல்வியை நினைத்துக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதமாற்றத்துக்கென்றே வந்தவர் பார்சிவல் பாதிரியார். அவரிடம் ஆங்கிலம் கற்கச் சென்றவர் நாவலர் பெருமான். பெருமான் மேற்கொண்ட சைவ நீதியின் மேன்மை, பாதிரியார் மதமாற்ற நோக்கத்தை மறக்கவும், "மம" (எனது) குரு என்று தம்மை (நாவலர் பெருமானை)த் துதிக்கவும் வைத்துவிட்டது.

இந்தியாவிலே சைவசமயிகளுள்ளுஞ் சைவசமயத்தில் உட்பற்றில்லாதவர்கள் பலரேயாகவும், இவ்வியாழ்ப்பாணத்திலே கிறிஸ்தவ மதத்திற் புகுந்தவர்களுள்ளும் சைவசமயத்தில் உட்பற்றற்றவர்கள் அரியராதலாகிய இத்துணை விசேடத்துக்குக் காரணந்தான் என்னையெனில் கூறுதும்:

"எத்துணைக் காலந் திருப்பித் திருப்பிப் படிக்கினும் கேட்பினும் எத்துணையுந் தெவிட்டாது தித்தித்தமுதூறும் அதியற்புத அதிமதுரத் திவ்விய வாக்காகிய கந்தபுராணத்துள்ள பதியிலக்கணத் திருவிருத்தங்களைக் கேட்டல் சிந்தித்தல்களினால், இவர்கள் உள்ளத்தூற் றெடுத்த மெய்யுணர்வேயாம்" என்று யாழ்ப்பாணச் சமயநிலையில் நாவலர்பெருமான் கூறியிருப்பது இங்கே நினைவுகூரத்தக்கது.

நாவலர்பெருமான் காலத்தில் புராணபடனம் உச்சநிலை எய்தியது; இதிலிருந்து தமிழரசர் காலத்தில் புராணபடனம் எத்துணை உன்னத நிலையிலிருந்திருக்குமென்பது ஊகிக்கத்தக்கது.

சைவசமயி, பல சமயங்களுக்கும் பொதுவான இலக்கணமும், இருபத்துமூன்று சிறப்பிலக்கணமும் உடையனாதல் வேண்டுமென்பது, கந்தபுராண முகப்பில் சிவபுராண படன விதியிற் காட்டப்பட்டது. சிறப்பிலக்கணங்களுள் ஒன்று புராணபடனம். அது ஏனைய சிறப்பிலக்கணங்களையும், பொது இலக்கணங்களையும் வருவிக்கவல்லது. அவ்விஷயத்தில் கந்தபுராண படனம் தனிச்சிறப்பு வாய்ந்தது.

**நாவலர் பெருமானின் தீர்க்கதரிசனம்:-**

ஆங்கில மோகம் அதிகரிப்பதையும், "நல்லவழி காட்டுவோம் உடுபுடைவை சம்பளம் நாளுநாளுந் தருகுவோம், நாம் சொல்வதைக் கேளும்" என்று,

பாதிரிமார் தூபம் இடுதலையுங்கண்டு, இம்மோகம் ஆண்களை விழுங்கிப் பெண்களிலும் தாவும், "இத்தேசத்திலே பெண்களுள்ளும் புராணம் அறியாதார் இலர்" என்ற காலம் போய், "புராணம் அறிந்தார் இலர். என்ற காலம் வரலாம் என்ற எண்ணம் நாவலர் பெருமானை விழுங்கியது. கலக்கம் குடிகொண்டது.

மக்களை நல்வழிப்படுத்திப் பிறவிப் பிணியைப் போக்குவதற்குக் கந்தபுராணமே கைகண்டபரம ஔஷதம்.

அதனைக் கற்றோரும் மற்றோரும் ஆகிய வருங்காலத்தவர் யாவரும் எளிதிற் பயன்படுத்தற்கு ஏற்ற அநுபானம் யாதாம் என்ற சிந்தனையில் உதயமானது.

*வெற்றி வந்தால் பணிவு அவசியம். தோல்வி வந்தால் பொறுமை அவசியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கந்தபுராண வசனம்**

அச்சிந்தனையை வலி செய்தது பெரியபுராண வசனம்.

"நம்முடைய சைவசமய நூல்களை எல்லாருக்கும் எளிதில் உபயோகமாகும் பொருட்டு வெளிப்படையாகிய, வசனநடையிற் செய்து, அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தின் அது பெரும் புண்ணியமாகும் என்று துணிந்து, சிலவருடத்துக்கு முன் பெரிய புராணத்தை அப்படிச் செய்தேன். அது அநேகருக்குப் பெரும் பயன் விளைத்தலைக் கண்டறிந்தமையால் கந்தபுராணத்தையும் அப்படியே செய்கின்றேன்" என்பது நாவலர் பெருமானின் கூற்று.

இப்பொழுது சில முக்கிய ஸ்தலங்களில் புராணபடனம் கேட்போரின்றி நடைபெறுவதுண்டு. கேட்பவை அங்குள்ள தூண்களே.

சில இடங்களில் ஒருவர் பாட்டை வாசிக்க, மற்றொருவர் உரையை வாசிக்கின்றார். கேட்பதற்குத்தான் ஆளில்லையே. உரையை வாசியாமலும் விடலாம்.

வசனம் வாசிக்குங் காலம் தூரத்தில் இல்லை.

வீடுகளில், வீட்டாரும், அயலில் உள்ளவரும் சுற்றத்தவரும் விரதமிருந்து, வசனத்தை வாசிக்கக் கேட்குங் காலம் நெருங்கிக்கொண்டிருக்கின்றது.

சுபதினத்தில் தொடங்கிச் சுபதினத்தில் பூர்த்தியாக்கலாம். பூர்த்திக்காலத்திலும், திருவவதாரம், திருக்கல்யாணம் முதலிய விசேட நிகழ்ச்சிகளிலும் இயன்ற அளவு விசேட ஆராதனை, அன்னதானம் நடத்தலாம்.

"சைவசமயிகள் சிவபுராணங்கள் வாங்கி, தங்கள் தங்கள் சுற்றத்தார் முதலாயினோர் கேட்ப, மெய்யன்போடு வாசித்து, பாவங்களை வெறுத்து, தங்கள் தங்களாலியன்ற புண்ணியங்களை விதிப்படி சிரத்தையோடு செய்து, சிவபெருமானை வழிபட்டு உய்யக் கடவார்கள்" என்பது நாவலர்பெருமான் கூற்று. இக்கூற்றுக் கந்தபுராண வசனத்துக்கு மிக மிகப் பொருத்தமான தலையாயகூற்று.

கந்தபுராண வசனம் எங்கும் பரவவேண்டும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, நாவலர் நினைவாகக் கடந்த காலங்களில் செய்த அருமையான காரியங்கள் அநேகம். நாவலர் பெருமானின் ஆத்மசக்தி, தக்கார் ஒருவரைத் தூண்டித் தாம் தொடக்கிவைத்த கந்தபுராண வசனத்தைப் பூர்த்தி செய்திருக்கின்றது. அவ்வாறே, இப்பொழுது வசனத்தின் மறுபதிப்பை நாவலர் சபையைத் தூண்டி வெளிப்படுத்தியிருக்கின்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபைக்கு நாவலர் பெருமானின் ஆத்மீக ஆசி என்றும் இருந்துகொண்டேயிருக்கும்.

கந்தபுராண உதிரத்தில் உதித்த நாவலர் பெருமானின் ஆன்மசக்தி இருந்தவாறு.

கந்தபுராண வசனம் என்றும் நிலவுக! எங்கும் பரவுக.

### குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| *யூன்* | *05* | *வை 22* | *திங்கள்* | *திருஞானசம்பந்தர்*<br>*திருநீலகண்ட யாழ்ப்பாணர்* |
| *யூன்* | *23* | *ஆனி 08* | *வெள்ளி* | *மாணிக்கவாசகர்* |
| *யூலை* | *25* | *ஆடி 09* | *செவ்வாய்* | *மயில்வாகனம் சுவாமிகள்* |
| *யூலை* | *26* | *ஆடி 10* | *புதன்* | *சுந்தரமூர்த்தி நாயனார்* |

*எல்லாம் தெரியும் என்பவர்களைவிட என்னால் முடியும் என்று முயற்சிப்பவரே வாழ்வில் ஜெயிக்கிறார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் தவமொழி

(தொடர்ச்சி...

– திரு ஆ.தா.இ. ஜெயபாலன் அவர்கள் –

இறைவன் இந்த மனித உடம்பிலேயே நம் உள்ளத்தில் மறைந்து நிற்கிறான். இந்த உண்மையை உணர்ந்து, உள்ளத்தில் நிற்கும் இறைவனை தரிசிப்பதே சித்தி என்று நம்முடைய சித்தர்கள் கண்டனர். இந்தச் சித்தியையே மகத்தான இலட்சியமாக மக்களுக்கு உபதேசித்தார்கள்.

திருமூலர் சித்தர்களில் எல்லாம் பெரிய சித்தராவார். அவர் மேலும் பாடுகிறார்.

மாயனை நாடி மனநெடுந் தேரேறிப்

(மாயனை - பாலுக்குள் மறைந்து நிற்கும் நெய்போலக் காணாமல் நம்முள் நிற்கும் இறைவனை - நாடி - காண வேண்டும் என்று எண்ணி மன நெடுந் தேர் ஏறி - மனமாகிய விமானத்தில் ஏறிக்கொண்டு நெடுந்தேர்- நெடுந்தூரம் செல்கிற விமானம்)

போயின நாடறி யாதே புலம்புவர்

(போயின் நாடு - செல்லும் வழி அறியாத தெரியாமல் புலம்புவர் - காண வேண்டியதை காணவில்லை என்று கதறுவார்கள்)

இறைவன் எங்கோ தூரத்தில் இருக்கிறான் என்று நினைத்து அவனைக் கண்டுபிடிக்கச் சென்று, திசை தெரியாமல் அங்கும் இங்கும் எண்ணங்களைச் செலுத்தி தேடுவார்கள் என்று மக்களின் அறியாமையும் பயனற்ற முயற்சியையும் சொல்கிறார். இனி தனது நல்லனுபவத்தை பாட்டின் மூலம் சொல்கிறார்.

தேயமும் நாடுந் திரிந்தெங்கள் செல்வனைக்
காயமின் னாட்டிடைக் கண்டுகொண்டேனே.

(எங்கள் செல்வனை- பெறுவதற்கரிய செல்வமாகிய இறைவனை தேயமும் நாடும் திரிந்து- புற உலகிலே எங்கெங்கோ பகிர்முகமாக எண்ணங்களைச் செலுத்தி தேடித் திரிந்து காயம் இந் நாட்டிடை- இந்த காயமாகிய நாட்டில் அதாவது, இந்த உடம்பினுள்ளே கண்டுகொண்டேனே- உள்நோக்கிப் பார்த்துக் கொண்டேன்)

எம் பெருமான் எங்கோ இருக்கிறான் என நினைத்து எண்ணங்களை அவனைத் தேடும்படி எங்கெங்கோ செலுத்தினேன். கடைசியில் இந்த உடம்புக்குள்ளே இருப்பதை கண்டுகொண்டு விட்டேன் என்கிறார் தவயோகி.

மாயனை நாடி மனநெடுந் தேரேறிப்
போயின நாடறி யாதே புலம்புவர்
தேயமும் நாடுந் திரிந்தெங்கள் செல்வனைக்
காயமின் னாட்டிடைக் கண்டுகொண் டேனே.

*ஒரு நொடி துணிந்தால் இறந்துவிடலாம். ஒவ்வொரு நொடியும் துணிந்தால் ஜெயித்துவிடலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் பக்தர்களுடைய உள்ளத்திற்குள்ளே புகுந்து நிற்கிறான் என்ற உண்மையை மேலும் பாடுகிறார்.

புகுந்துநின் றானெங்கள் புண்ணியமூர்த்தி
புகுந்துநின் றானெங்கள் போதறி வாளன்

(எங்கள் புண்ணிய மூர்த்தி- புண்ணியத்தின் பயனும் புண்ணியத்தின் சொருபமும் ஆகிய எம்பெருமான் புகுந்து நின்றான்- ஒளிந்து கொண்டு நிற்கிறான் போதகம்- ஞானம் ஞானமாகிய முற்றறிவு போதறிவாளன்- முற்றறிவாளனாகிய ஞான மூர்த்தி)

புகுந்துநின் றானடி யார்தங்கள் நெஞ்சம்

(அடியார் தங்கள் நெஞ்சம்- தன்னிடத்தில் பக்தி செலுத்துகிற அடியார்களுடைய உள்ளத்தில் புகுந்து நின்றான்- நுளைந்து நிற்கிறான்)

அதாவது அவன் நிற்பதை காணத் தகுந்த பக்தி தோன்றியவுடன் அவன் நிற்பதை காண்கிறார்கள். முன்பு காணமுடியாமல் நின்றதையே, இப்பொழுது பக்தி மேலிட்டவுடன் காண்பதால் "புகுந்து நின்றான்" என்கிறார்.

புகுந்து நின்றானையே போற்றுகின் றேனே

(போற்றுகின்றேன் - துதிபாடுகின்றேன்)

அப்படி புகுந்து கொண்டு நிற்கின்ற இறைவனையே நான் ஆனந்தப் பரவசமாக துதிக்கிறேன்.

புகுந்துநின் றானெங்கள் புண்ணியமூர்த்தி
புகுந்துநின் றானெங்கள் போதறி வாளன்
புகுந்துநின் றானடி யார்தங்கள் நெஞ்சம்
புகுந்துநின் றானையே போற்றுகின் றேனே.

இறைவனை நாடிக் கண்டுகொண்ட பின்பு, வேறு எவ்விதமான ஆசாபாசங்களும் இல்லாமல், மோன சமாதியிலே இருந்த அனுபவத்தை பாடுகிறார் திருமூலர்.

மெய்த்தவத் தானை

மெய்யான தவத்திற்கு இலட்சியமும் பயனுமாக விளங்குகின்ற இறைவனை

மெய்த்தவத் தானை விரும்பும் ஒருவர்க்குக்
கைத்தலஞ் சேர்தரு நெல்லிக் கனியொக்குஞ்
சுத்தனை

(விரும்பும் ஒருவர்க்கு- நாடுகின்ற பக்தர்கள் யாராக இருந்தாலும் அவருக்கு கைத்தலம் சேர்தரு- உள்ளங்கையிலே வைத்திருக்கும் நெல்லிக் கனி ஒக்கும்- நெல்லிக்கனி போன்ற சுத்தனை- மாறுபாடில்லாத உறுதிப் பொருளாகிய இறைவனை)

சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற தேவர்கள்
சுத்தனை

(தூய நெறியாய் நின்ற- தூய மார்க்கத்திலே நிற்கின்ற தேவர்கள் அத்தனை- தேவர்களுக்கப்பனாகிய முழுமுதற் கடவுளை அத்தன் - அப்பன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனை நாடி அமைந்தொழிந் தேனே

(நாடி- உள்ளத்தால் விரும்பி அமைந்தொழிந்தேனே- வேறு எந்தச் சலனமும் இல்லாமல் மனதின் வாதனைகள் அறவே ஒழிந்து அமர்ந்து விட்டன)

மெய்த்தவத் தானை விரும்பும் ஒருவர்க்குக்
கைத்தலம் சேர்தரு
சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற தேவர்கள்
அத்தனை நாடி அமைந்தொழிந் தேனே.

இனி இப்படி இறைவனை நாடி வேறு எவ்விதமான எண்ணங்களும் இல்லாமல், யோகத்தில் அமர்ந்திருப்பது கைகூடுகின்ற காரியமா? எனவே பக்தர்களுக்கு ஒரு வழியை உபதேசிக்கிறார் தவயோகி.

விரும்பில் அவனடி வீர சுவர்க்கம்

(விரும்பின்- உண்மையான பக்தி செலுத்தினால் அவன் அடி- இறைவனுடைய திருவடியே வீர சுவர்க்கம்- மாட்சி பொருந்திய வீரர்களுக்கு கிடைக்கின்ற பெரிய பதவியாகும்.

பொருந்தில் அவனடி புண்ணிய லோகந்

(பொருந்தில்- உள்ளம் பொருந்தி நின்று விட்டால் போதும் அவன் அடி- இறைவனுடைய திருவடியே புண்ணியலோகம்- புண்ணியம் செய்த பெரியோர்களுக்கு கிட்டுகின்ற பேரின் உலகமாகும்)

திருந்தி அவனடி தீர்த்தமு மாகும்

(திருந்தில்- மனம் கள்ளமின்றி மெய்யான நிலையிலே நின்றால் அவன் அடி- இறைவன் திருவடியே தீர்த்தமும் ஆகும். பாவங்கள் கழிகின்ற புண்ணிய நதிகளாகும்) இத்தனை பயன்களும் யாருக்குக் கிடைக்கும்?

வருந்தி யவனடி வாழ்த்தவல் லார்க்கே.

உண்மையான உருக்கத்தோடு எம்பெருமானுடைய திருவடியை எண்ணி துதிக்கின்ற பக்தர்களுக்கு, எல்லாப் பயனும் அவனுடைய திருவடியே தரவல்லது எனகிறார். அதாவது இறைவன் திருவருள் எல்லா நலமும் வழங்கக் கூடியது. அந்தத் திருவடிகளுக்காக நாம் செய்யவேண்டிய பக்தியோகம் என்ன? இறைவனிடத்தில் மெய்யான விருப்பம் செலுத்துவது, திருவடியிலே மனம் நன்கு பொருந்தி நிற்பது. தீய எண்ணங்களிலிருந்து மனம் திருந்துவது. இவையே திருவடியின் திருவருளை நாடுவோர்க்குரிய கடமைகள் என்பது தவயோகியின் உபதேசமாகும்.

விரும்பில் அவனடி வீர சுவர்க்கம்
பொருந்தில் அவனடி புண்ணிய லோகந்
திருந்தில் யவனடி தீர்த்தமு மாகும்
வருந்தி யவனடி வாழ்த்தவல் லார்க்கே.

வேறு வேறு நிலைகளிலே வேறு வேறு முறையாக வழிபாடு செய்து பயனை அனுபவிக்கின்றார்கள் அடியார்கள். ஆனால் எல்லோர்க்கும் எக் காலத்தும் எல்லாம் தரவல்லது இறைவன் திருவடியே! (தொடரும்...

*நட்பு எப்போதும் ஒரு இனிமையான பொறுப்பே தவிர, அது ஒருபோதும் வாய்ப்பு அல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமம் அறிவும் அனுபவமும்

– திரு கௌ. சித்தாந்தன் அவர்கள் –

முத்தித் திருத்தலமாக வைணவர்களுக்கு "ஸ்ரீரங்கம்" போல சைவர்களுக்கு சிதம் பரத்தைக் குறிப்பிடும் மரபொன்றுண்டு. மிக நீண்டகாலமாக இலங்கை தமிழ்ச் சைவர்களிலே பெரும்பாலானவர்களதும் முத்தித்தலமாகவும் வழிபாட்டுத் தலமாகவும் விளங்குவது கதிர்காமம். எமனுக்குரிய திசை தெற்கு. கதிர்காமம் இலங்கையின் தென்கீழ்த் திசையிலே அமைந் திருக்கிறது. எனவே இங்கு வீற்றிருந்து அருள்புரியும் முருகப் பெருமான் எம பயத்தைப் போக்கும் "அருமருந்து" என்பது எம்மவர்களது ஐதீகம். ஐதீகத்திற்கு வரலாற்றினைவிட அளவிறந்த வலுவுண்டு. ஒரு கதிர்காமப் பாதயாத்திரையின் தொடக்கத்திலே சிவயோக சுவாமிகள் முருகனடியவர்களைப் பார்த்து தென்திசையைக் காட்டி "அப் பெருமான் எங்களுடன் இருக்கிறார். அதனால் அஞ்சுவது யாதொன்றுமில்லை; அஞ்சவருவதுமில்லை" என்று சொன்னாராம். சுவாமிகளின் கூற்றுப்படி அப்பெருமானைச் சிக்கெனப் பிடித்துச் செயற்பட்டு மேனிலை பெறுவதற்கான சந்தர்ப்பம் கிட்டியிருக்கிறது.

## கண்கண்ட தெய்வம் கதிர்காமக் கந்தனை நேரிலே வணங்குவோம்!

அல்லற்படும் ஆன்மாக்களுக்கான இறைவனின் திருவருள் திறத்தினைப்பற்றிப் பேசுபவர்கள் "மார்ச் சால சம்பந்தம்", "மர்க்கட சம்பந்தம்" எனுமிரண்டைப் பற்றிக் கூறுவதனைக் கேள்விப்பட்டிருப்போம். "மார்ச்சாலம்" என்பது பூனை. "மற்கடம்" என்பது குரங்கு. முருகன் வள்ளியை ஆட்கொண்டது பெரிதும் மார்ச்சால நியாயத்தின்படியே என்பதனை புராண இலக்கிய வாயிலாகவும் அறிகிறோம். மானிடக் குறத்தியுடன் இறைவன் சம்பந்தப்படுகின்ற இக்கதை வைஷ்ணவ அவதாரக் கோட்பாட்டின் செல்வாக்கினாலும் ஏற்பட்டிருக்கலாம் என்று எண்ணத்தோன்றுகின்றது. அவதாரம் என்ற எண்ணக்கருவிலே "தாரம்" என்பது, உயர்ந்த பொருளைக் குறிப்பது "அவதாரம்" என்பது மேலான பொருள் தனது உயர்ந்த நிலையிலிருந்து கீழிறங்கி வருவதனைக் குறிக்கிறது. இறைவன் நமது கண்ணுக்கெட்டாத தூரத்திலே நின்று எம்மை ஆட்சி செய்வதனை விட, எங்களுடன் ஒருவனாக நின்று அல்லது எமக்குச் சமீபமாக நின்று எம்மை ஆண்டால் கூடுதல் விளைவை பெற்றுக்கொள்ளலாமென்று திடமாகக் கூறலாம். சைவ நாயன்மார்களைவிட, வைணவ ஆழ்வார்கள் விஷ்ணுமீது உருக்கமான பாடல்களைப் பாட இப் பெருமானின் பல அவதாரச் செயல்கள் முக்கிய காரணமாகும். புராணப்படி முருகன் தமிழ்நாட்டிலே வள்ளியை மணந்தது திருத்தணிகையிலேயாம். இலங்கையரின் படி அது கதிர்காமத்திலேயாம். கதிர்காமத்து வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமானின் இருப்பை வலுவாகக் காட்டுவதாக பேராசிரியர் சி. தில்லைநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களால் எழுதப்பெற்ற "இருபக்கமும் இழுபட நின்ற முருகன்" (தினகரன், 1962) எனும் கட்டுரையும் ஆதிவாசிகள் முருகனை "மச்சான்" என்று அழைப்பதும் சான்றாக விளங்குகின்றன.

கதிர்காமம் குறிஞ்சியும் முல்லையும் சேர்ந்த பிரதேசத்தில் அமைந்துள்ளது. குறிஞ்சி நிலத்தெய்வம் முருகன் என்பதையும் முல்லைநிலத் தெய்வம் மாயோன் என்பதையும் தொல்காப்பியரின் "மாயோன் மேய காடுறை உலகமும் சேயோன் மேய மைவரை உலகமும்" எனும் நூற்பா வரிகள் மூலமும் அறியலாம். குறிஞ்சி நிலத்தின் அக ஒழுக்கம் "புணர்தல்" ஆகும். இது களவு, கற்பு என இருவகைப்படும். களவு முந்தியது. கற்பு பிந்தியது. "தமிழ் நுதலியது களவு" என்பர். முருகன் வள்ளியை மணந்தது களவு மணமுறைப்படியாம். "களவும் கற்று மற" என்பது தமிழ்ப் பழமொழி. இது ஆன்மீகத்திற்குக் கூடப்பொருத்தமானது. இவ்வாறு அவதாரத்துடன் தொடர்புபட்ட சம்பவங்கள் கதிர்காமத்திலே நிகழ்ந்தமை கதிர்காமம் மகிமையும் அற்புதமும் நிறைந்த ஆலயமாக திகழ்வதற்கு அடிப்படைக் காரணமாகும். இத்தகைய மகிமை பெற்ற இறைவனாலும் அவனை வழிபட்டு உய்திபெற்ற ஏராளமான அடியவர்களாலும் சிறப்புபெற்ற கதிர்காமத் தலத்தை நாமும் வழிபட்டு உய்திபெறுவதுதான் பிறவியின் பயன்.

## சிவன் - முருகன் - ஆனைமுகன்

முருகப்பெருமான் சிவபூசை செய்த இடமே கதிர்காமம் எனும் ஐதீகம் இலங்கைத் தமிழ்ச் சைவர் பலரிடம் வலுவாக உள்ளது. பக்தர்களின் "அரோஹரா" ஒலியும் சிவலிங்கத்தை ஒத்த முக்கோண வடிவிலான கதிர்காமப் பெரியகோயிலின் பிரகாரமும் பெரிய கோயிலுக்குச் சமீபமாக இருக்கின்ற சிவலிங்கத்திருக்கோயிலும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

கதிர்காமத்தின் புறத்தோற்றப்பாடான பேராலயமும் அதன் இடப்புறமாகவுள்ள தெய்வானை அம்மன் சந்நிதானமும் அருவுருவமான சிவலிங்கத் திருமேனியினையே நினைப்பிக்கின்றன. ஓங்கார வடிவமான விநாயகர் வலப்பக்கமாக வீற்றிருந்து அருள் புரிகின்றார். குகசித்தாந்த தத்துவத்தின் விளக்கத்தினையும் இவ்வமைப்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் போலவும் தோன்றுகின்றது.

மனித உறவு நிலையில் மாமன் - மருமகன் உறவு நிலைக்கடுத்ததாக, அண்ணன்-தம்பி உறவு நிலையினைக் குறிப்பிடுவதுண்டு. தாய், தந்தையர் மகனைத் தம்பி! என்று அழைப்பதும் இதற்குச் சான்று. வள்ளி திருமணத்திற்கு ஆனைமுகனின் பங்கு அளப்பரியது. அண்ணனைப் போன்றே தம்பியாகிய முருகனும் அண்ணனாகிய ஆனைமுகன்மீது காட்டும் மதிப்பும் அளவிடற்கரியது. நான்முகனிடம் பிரணவப்பொருள் கேட்டு அவனைச் சிறையில் அடைத்தது இதற்குச் சான்று. இதன் வழி கதிர்காமம் செல்வதற்கு முன் "புத்தல்" எனும் இடத்தில் வீதிப்போக்குவரத்திலே ஓரிரண்டு யானைகளையாவது சந்தித்தே செல்ல வேண்டும். அங்கே நிற்கின்ற யானைகளைச் சந்தித்து அதற்கான உபசரணைகளைச் செய்து செல்பவர்களுக்கு வழிபாட்டின் பயன் அதிகம் என்பர். யானை மிகவும் கூர்மையான, தெளிவான, பிரகாசமான பார்வைச் சக்தியினைக் கொண்டது. தனக்கு அதிதூரத்தில் நடப்பதனையும்

*ஒவ்வொரு நாளும் வெற்றி பயணத்தை தொடங்கிவிட்டேன் என்று முதலடி எடுத்துவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது அறியும். மிகச் சமீபமாகக் கிடப்பதும் அதற்குத் தெரியும். குண்டூசியினைக்கூட பெரிய தும்பிக்கையினால் எடுக்கும் ஆற்றல் பொருந்தியது. கதிர்காமத்து யானை சிறியதாயினும், பெரியதாயினும், நிதானமானது. பயந்து வெருண்டு விலகி ஓடுபவர்களையும் அதற்குத் தெரியும். தனக்கு ஆதரவளிப்பவர்களையும் தெரிந்து அதற்கேற்றவாறு தானும் தனது நன்றியறிதலைக் காட்டும். யானைக்குக் கரும்பின்மீது விருப்பமதிகமென்று வண. மோகனதாஸ் சுவாமிகள் மூலமறிந்து அண்மையில் அதற்கென வளர்த்த கரும்பினைக் கொண்டு சென்று அதன் அருகில் வாகனத்தில் இருந்தவாறே கரும்பினைக் கொடுத்தபோது, அதனைப் பக்குவ மாகப் பெற்றுண்டு நாம் சென்ற வாகனத்திற்குப் பக்குவமாக முத்தம் கொடுத்து எம்மை ஆசீர்வதித்து வழியனுப்பி வைத்ததையும் அதன் தொடர்ச்சியாக செல்லக் கதிர்காமத்தில் வைத்துத் தரிசனம் தந்து ஆசீர்வதித்ததும் அரும்பெரும் சித்தென்றே கூறத்தோன்றுகிறது. செல்லக் கதிர்காமத்தை "சின்னக் கதிர்காமம்" என்றும் கூறுவர். கதிர்காமக் கந்தன் ஆதியில் இங்குதான் கோயில் கொண்டருள் புரிந்ததாகவும் கூறப்படுகின்றது. மாணிக்ககங்கை இவ் ஆலயத்திற்கு மிகச் சமீபமாகப் பாய்ந்து செல்கின்றமையும் இதனை நம்பவைக்கின்றது. இத்தகைய ஆலயத்திற்குப் பாகனுடன் 27.03.2021 அன்று வருகை தந்த யானை முதலில் செல்லக் கதிர்காமத்தின் கொடிமரத்திற்கு சமீபமாக நின்று தனது முன்னங்கால்களை நன்கு மடக்கியவாறு மிகப் பணிவாக வீழ்ந்து வணக்கம் செலுத்திய முறைமை, குறிப்பிட்ட ஒரு சில நிமிடங்களிலே அரிய பல பிரதிபலிப்புக்களை உண்டாக்கியது இச் சம்பவம். கண்கண்ட தெய்வம் விநாயகன் என்பதனை உணர்த்தியதா? தனக்குத் தானே வணக்கஞ் செலுத்தியதைக் காட்டியதா? சின்னக் கதிர்காமத்திற்கான பக்தி கலந்த மரியாதையினைக் காட்டியதா? எமக்காகக் காண்பிக்கப்பட்டதா? என்றெல்லாம் நினைக்க வைக்கின்றது.

## கதிர்காமம் மகாதேவாலய வழிபாடு

அதிரவரு மாணிக்க கங்கைதனில் மூழ்கி
அன்பொடு சிவாயவென வருணீறு பூசி
முதிருமன் பால்நெஞ்ச முருகவிழி யருவி
முத்துதிர மெய்ப்புளக மூரவுரை குளறப்
புதியசெந் தமிழ்மாலை புகழ்மாலை சூடிப்
பெருவில்கந் தாசுகந் தாவென்று பாடிக்
கதிரைமலை காணாத கண்ணென்ன கண்ணே
கற்ப்பூர வொளிகாணாக் கண்ணென்ன கண்ணே.

நமது சோமசுந்தரப் புலவரவர்களால் கதிர்காம முருகன்மீது பாடப்பெற்ற இப்பாடல், சைவ சமயம் என்ற பெயரிலே வாழ்ந்துகொண்டு கதிர்காமப் பக்கமே ஒரு தடவையாவது செல்லாதவரையும் செல்வதற்குத் தூண்டும் அருமையான பிரபந்தமாகும். உண்மையான பக்த அடியவரது வழிபாடு இப்படித்தானிருக்கும் என்பதற்குத் திருட்டாந்தமான பாடலிது. சொகுசாகச் சென்று தங்கி, விரும்பியவாறு நீராடி, குளிர்நீங்க தேனீரும் அருந்திவிட்டு செல்வதற்கான கதிர்காம இந்து யாத்திரிகர் விடுதி இருக்கும்போது மாணிக்க கங்கை எங்கே? நமது பக்திக் கோலமெங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி, சனி, ஞாயிறு மூன்று நாட்கள் மகாதேவாலயத்திலே வழிபாடு செய்ய வேண்டுமென்று எமது திட்டம். 26.03.2021 வெள்ளி இரவு பயணக்களையினையும் நினையாது, உரிய ஆசார அனுட்டானங்களுடன் வள்ளி அம்மனின் அனுமதியுடன் பெரிய கோயிலை அணுகினோம். ஆலய வாயிலில் பக்த சனக்கூட்டம் பெருவாரியாக நிறைந்து நின்று வழிபாடாற்றியது வாயிலில். தீ மூட்டியிருந்தாற்கூட அதன்மீது நடந்து கடந்து மகாதேவாலயத்துட் செல்லலாம் என்றதொரு வகையான பக்தியுணர்வும் மேலிட்டது. அருவமான முருகன் சோதிப் பிழம்பாகத் தெரிந்தான் கதிர்காமக் கந்தனது கற்பூர ஒளி கண்ட கண்கள் படைக்கப்பட்டதன் பயனை அடைந்துவிட்டன என்பதனை உணர்ந்தோம். உள்மண்டபத்திற்குச் செல்லக் கால்கள் மறுத்துவிட்டன. மகாதேவாலயத்தின் பிரகாரத்தினை வலம் வந்தோம். விநாயகப் பெருமானும் புத்தபகவானும் மனம், மொழி, மெய்யொடுக்கத்திற்கு கருணை காட்டினர். பத்தினி அம்மனையும் கண்டதும் பயபக்தி ஏற்பட்டது. சமய வழிபாட்டிலே நீதி, நேர்மை, ஒழுங்கு நிலவ அவள் பார்வையும் அவசியம் தேவையென்பதனை உணர்ந்து அவளைப் பணிந்து, தெய்வயானை அம்மன் சந்நிதானத்தை அடைந்து வழிபாடாற்றி நிறைவாக பழநியாண்டவரையும் வணங்கி, சித்தர் சமாதிகளையும் தரிசனம் செய்தோம். அங்கே எமக்கு அருந்துணையாக நின்ற பெரியார் தில்லைநாதன் ஐயா அவர்களும் அன்பர்களும் காத்து நின்று இரவு உணவு அருந்தச் செய்து, வாயில்வரை வந்து மறுநாள் ஏற்பாடுகள் குறித்துக் கதைத்து விடுதிக்கு அனுப்பி வைத்தனர்.

இரண்டாம் நாள் சனிக்கிழமை காலை பேராலய முன்றலில் நிற்கிறோம். மேலங்கியின்றி தீட்சைக்குறி மற்றும் உருத்திராட்ச மாலை அணிந்த கோலத்தினைக் கண்டோ என்னவோ, சிங்களப் பெரியாரில் ஒருவர் எம்மை அணுகி "ஸ்வாமி! மஹாதேவாலய வஹாலதா?" என்று கேட்டார். எமக்கு சிங்கள மொழிமூலமான விடை விரைவாக எங்கிருந்து வந்ததென்று தெரியவில்லை. "அத செனசுரதா. அத்துளே சுத்த கரனவா நவயாய் மாறட்ட பஸ்ஸே பூஜா கரணவா" என்றோம். அவர்களும் "ஸ்துதிய்" கூறிச் சென்றனர். "என்னைப் பாட வைத்தான் அந்தப் பழனியப்பன்" என்பதுபோல சிங்களத்திலே எம்மைப் பேச வைத்தவனும் அந்தக் கதிர்காம முருகனே என்று எண்ணி அவன் தாழ் பணிந்தோம். சனிக்கிழமைகளில் கோயில் சுத்தம் செய்யப்படுவதால் அன்று அதிகாலைப் பூசை நடைபெறாது என்பது முதல்நாளிரவு திரு தில்லைநாதன் அவர்கள் மூலம் கேட்டறிந்தது. கதிர்காமத்திலே வழிபாடாற்றுபவர்கள் ஒருவரை ஒருவர் "சுவாமி" என்றுதான் அழைப்பார்களாம். கதிர்காமத் தலத்தில் வைத்து கந்தனருள் பெற்ற சிங்களப் பெரியார் ஒருவர் "ஸ்வாமி!" என்று அழைத்தது பல்கலைக்கழகத்தில் பெற்ற பட்டத்தைவிட பன்மடங்கு உயர்ந்தது என்பதனை உணர்ந்து திருவருளின் செயலினை வியந்தோம்.

## கதிரமலை யாத்திரை

சுவாமி தந்த பெருவிருதுடன் மலையேற வேண்டும் என்ற உந்தலும் "கதிரமலை காணாத கண்ணென்ன கண்ணே" என்ற பாடலடிமூலமான பக்தியுணர்வும் ஒருங்கே முன்னிழுக்க கதிரை மலையடிவாரத்தினை நோக்கிப் பயணிக்கலானோம். வாகனச் சாரதி வாகனத்தை எடுக்கத் தொடங்கியபோது, அவரது கசட்டிலிருந்து "மருதமலைக்கு நீங்கள் வந்து பாருங்க எங்கள் மகனோடு மனம்விட்டுப் பேசிப் பாருங்க" என்று ஒலித்த பாடல் "ஒருதரம் கதிரமலைக்கு

*வியர்வை துளியை அதிகப்படுத்து, வெற்றி வந்தடையும் வெகு விரைவில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்க வந்து பாருங்க..." என்பதுபோலக் கேட்டது. மலையடிவாரத்திற்குச் சென்றதும் "கஸ்டமின்றி வாகனத்திலே மலைக்குச் செல்லலாம்" என்று சிலர் அரிய ஆலோசனை கூறினர். நாம், "விமானத்தில் ஏறிச் சென்று மலையில் குதித்தால் இன்னும் நல்லாயிருக்கும்" என்று கூறி குறிஞ்சி அன்னையின் பாதந்தொட்டு வணங்கிக் கதிரமலை வேலவனைத் தரிசித்து வணங்கி வந்தோம். கைக்குழந்தைகளுடனான பெற்றோர்கள், சின்னஞ் சிறுவர்கள், தள்ளாடும் நிலையிலுள்ள மூத்தோர்கள், நோயாளிகள் என்று பலதரப்பட்டவர் கதிரமலைக்கு வந்து செல்வதைப் பார்க்கும்போது, இவர்கள்மீது பக்தி கலந்த இரக்கம் ஏற்பட்டதே தவிர நடைக் களையும் தெரியவில்லை. பாதையின் நடுவிலேயே குரங்குகள் இயற்கைப் புணர்ச்சியில் ஈடுபட்டமையால் நாம் சற்று சிரமப்பட்டு விலகிப் பாதையின் மறுபக்கத்தால் நடந்து சென்றோம். உரிய புணர்ச்சியினைக் கடைக்கண்ணால் பார்க்கும் புதுத்தம்பதியினருக்கு அது நல்ல சகுனம் என்று பாதயாத்திரை செய்த பெரியார் ஒருவர் கூறினார். மலையேறியதன் பயன் அன்று மாலை யானை தரிசனம் கிடைத்ததும், வள்ளியம்மன் வாயிலில் மாவிளக்கேற்றியதும் ஆலய பூசகர் மணியடிக்கவைத்ததுமாகும்.

## மகாதேவாலய விசேட பூசை

பிரதான ஆலயத்தின் உதயக்காலப் பூசை அதிகாலை 4.30 மணிக்கு என்று அறிந்து ஞாயிற்றுக்கிழமை உரிய தரிசனத்திற்காக விரைந்து சென்றோம். தந்தையார் மூலஸ்தானத்தை அடுத்துள்ள மண்டபத்திலே நின்று வழிபாடாற்றினார். நாங்கள் வெளியில் நின்று வழிபாடாற்றினோம். அர்ச்சனை செய்பவர்களும் பலவிதமான நேர்த்திக் கடன்களை நிறைவேற்று பவர்களும் நீண்டதூரம் வரிசையில் காத்து நின்றனர். மூலஸ்தானம் மூடுமந்திரம். அங்கே முத்துலிங்க சுவாமி என்ற சித்தரால் உருவேற்றப்பட்ட சக்திமிக்க யந்திரம் வைக்கப்பெற்ற பேழைக்குப் பூசை செய்யப்படுவதாக அறிகின்றோம். கப்புறாளை என்பவர்களால் வாய்கட்டி பூசை நிகழ்த்தப்படுகின்றது. நைவேத்தியம் காவு தடியில் எடுத்துச் செல்லப்படுவதும் தெரிகின்றது. பூசை நிகழ்த்தும் கப்புறாளை வெளியே வந்து முருகப்பெருமானின் திருவுருவம் வரையப்பெற்றுத் தொங்கவிடப்பட்ட திரைச்சீலையினை ஓங்கார ரூபமாக வணங்குகின்றார். இந்தப் பூசைகள் அஞ்ஞானிகளுக்கு, "மந்திரம் தெரியாதவன் விடிய விடியப் பூசை" என்றவாறும் தோன்றலாம். அதிக தூரத்திலே நின்ற பக்த நந்தனாருக்கு இறைவன் அவனுக்குச் சமீபமாக நின்றவர்களை விடவும் மிகவும் பிரகாசமாகக் காட்சி கொடுத்ததாகவும் பெரியபுராண வாயிலாக அறிகின்றோம். சாமீப முத்திபற்றிச் சைவசித்தாந்தம் கூறுவதும் உண்மைதான். ஆனால் சுவாமிக்கு நெருக்கமாக நின்று பூசை மற்றும் கிரியைகள் புரிந்த அனைவருமே சித்தர்களானதான சமய வரலாறில்லை. இங்குதான் சுவாமி விபுலானந்தரது "உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" எனும் பாடலடியின் அருமையும் பெருமையும் தெரிய வருகின்றது. கதிர்காமப் பெருமான் பூசை தொடங்க தூர நின்றவாறு கண்களை மூடிக்கொள்கின்றோம். பூசை நன்றாகத் தெரிகின்றது. தூலக் கண்ணினால் பார்ப்பவர்களைவிட மிக நன்றாகப் பூசையினைப் பார்க்கிறோம். தெரி கின்றது. இதுதான் அதிகாலப் பூசையின் அற்புதமேயன்றி வேறொன்றுமில்லையென்று எமது அனுபவம் சொல்ல வைக்கின்றது. மகாதேவாலய பூசையைத் தரிசித்துவிட்டு முருகப்பெருமானின் கிரியாசக்தியான தெய்வயானையம்மனையும் பழனியாண்டவர் முதலான தெய்வங்களையும்

*ஒருநாள் விடியும் என்று காத்திருக்காமல் இன்றே முடியுமென முயற்சிசெய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடு செய்து வழிபாட்டினை நிறைவு செய்துகொண்டோம். தில்லைநாதன் ஐயா அவர்கள் திருவருட் பிரசாதங்கள் நிறைந்த ஒரு பெரும் பொதியைத் தந்தார். ஏனையா இவ்வளவும் என்று கேட்கத் தோன்றியது; கேட்கவில்லை. இதற்கிடையில் எங்களுக்குச் செல்வச்சந்நிதி தலத்திலே ஆதரவுக்கரம் தரும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் தவத்திரு மோகனதாஸ் சுவாமி அவர்களை அங்கே அவரது மடத்திலே நிற்கவிடாது கதிர்காமம் அனுப்பியதாகவும் அவர் கதிர்காமம் வந்து எங்களைக் கேட்டுவிட்டுச் சென்றதாகவும் திரு தில்லைநாதன் ஐயா அவர்களும் இந்து யாத்திரிகர் விடுதியில் பணிபுரியும் திரு பிரதீபன் அவர்களும் கூறினர். ஆயினும் அவருடன் தொலைபேசியிலேயே உரையாடி ஆறுதல் பெறக்கிடைத்தது.

## குறிஞ்சிக்குமரன் தரிசனம்

திட்டமிட்டபடி மூன்றாம் நாள் கதிர்காமத்திலிருந்து பேராதனைக் குறிஞ்சிக்குமரனை நோக்கி வண்டி விரைகின்றது. ஞாயிற்றுக்கிழமையான அன்று குறிஞ்சிக் குமரன் ஆலயத்திற்குச் செல்ல மதியத்திற்கு மேலாகிவிட்டது. ஆயினும் அங்கே பூசை செய்யும் ஐயா எங்களுக்காகக் காத்திருப்பவர் போன்று நின்று, அர்ச்சனை தீபாராதனைகளை நிறைவாகச் செய்தார்.

இதன் பின்னர் மதிய உணவிற்காக பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் வ. மகேஸ்வரன் அவர்களிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. “எங் கோமான் அன்பர்க்கு முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே என்ன” மழை கொட்டக் கொட்ட பேராசிரியர் மகேஸ்வரன் குடும்பத்தினரின் விடுதியை அடைந்து, அவர்களின் அன்பான மாகேசுர பூசையிற் கலந்து கொண்டோம்.

உரிய நேரத்திற்கு மழையும் விட்டுத்தர, வீட்டிற்குப் புறப்பட்டோம். கதிர்காமப் பக்தி சற்று விடுபட பின்னே இருந்தவர்கள் சாரதி தூங்காதிருப்பதற்காக சினிமாப் பாடல்களை சாரதிமூலம் ஒலிக்கச் செய்யவே வாகனமும் வெப்பமேறி இடைவழியில் நின்றுவிட்டது. சாரதி சற்று பரபரப்படைந்தவராய் இயந்திரத்திலே நீரை நிரப்பி மீண்டும் பக்திப் பாடல்களை ஒலிக்கச் செய்தவராய் தன் பணியைச் சரிவரச் செய்தார். வீடு செல்வதற்கு முன் மாத்தளை முத்துமாரி அம்மன், முறிகண்டிப் பிள்ளையார் தரிசனங்கள் நிறைவாகக் கிடைத்தது.

கதிர்காமக் கந்தனை நாம் நினைத்த மாத்திரத்திலே சென்று வழிபாடாற்றிவிட முடியாது. நேரிற் சென்று வணங்க அவர் விடை தரவேண்டும். நாம் இம்முறை அவரிடம் செல்வதற்கு, ஒரு வாரத்திற்கு முன் செல்வதெனத் திட்டமிட்டும் அந்நாளில் ஜனாதிபதியவர்கள் கதிர்காம அபிவிருத்திப் பணிக்காகச் செல்கின்றாரென்றமையால், அடுத்த கிழமைக்கு ஒத்திப்போட்டுச் சென்றோம். இம்முறை எம்முடன் வருவதற்காக எமது நண்பரின் குடும்பத்தினரும் முயற்சியெடுத்தும் அவர்களுக்குத் திடீரென ஏற்பட்ட தொடக்கினால் வரமுடியவில்லை. கதிர்காமக் கந்தனை வருடாவருடம் சென்று வழிபாடாற்றினால் விதம் விதமான பக்தி அனுபவங்களைப் பெறலாம். என்பதற்கு பலர் எழுதிய கட்டுரைகள், நூல்கள், தோத்திரப் பாடல்கள் சான்று. கதிர்காமத்தின்மீது திருப்புகழ் பாடிய அருணகிரிநாத சுவாமிகளின் காலம் கி.பி. பதினான்காம் நூற்றாண்டு இறுதி அல்லது பதினைந்தாம் நூற்றாண்டுத் தொடக்கமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் தமது தமிழர் சமய வரலாறு நூலில் எழுதியுள்ளார். கதிர்காமத்துக்குரிய திருப்புகழ் என 30 பாடல்களை யாழ் சிவதொண்டன் நிலையம் (2004) வெளியிட்டிருக்கின்றது. ஏனைய பல முருகன் தலங்கள்மீது பாடப்பட்ட திருப்புகழ்களிலும் கதிர்காமம் குறிப்பிடப்பட்டுள்ளமை கதிர்காமத்தின் மகிமையினையே காட்டுகின்றதெனலாம்.

---

உணவு சமைக்கப்படும் இடத்தில் நல்ல அதிர்வுகள் இருத்தல் அவசியம். சமைக்கும் போது அனாவசிய சண்டைகள், அற்ப விவாதங்கள் நடந்தால் அந்த உணவு அசுத்தப்பட்டு விடும். துரியோதனன் 56 விதமான விஷேச உணவு வகைகளைத் தயாரித்து கிருஷ்ணரைச் சாப்பிடக் கூப்பிட்டான். உணவு சமைக்கும் இடத்தில் கிருஷ்ணரை எப்படிக் கைது செய்வது என்று கெட்ட விவாதத்துடன் உணவு சமைக்கப்பட்டது. கிருஷ்ணர் உணவு சாப்பிட மறுத்து நேராக விதுரன் வீட்டிற்குச் சென்றார். அவரைப் பார்த்த விதுரரின் மனைவி புளகாங்கிதம் அடைந்தாள். கிருஷ்ணர் வந்த மகிழ்ச்சியில் எதைத் தருகிறோம் என்பதே தெரியாமல் வாழைப்பழத்தை உரித்து பழத்தைத் தூக்கி எறிந்துவிட்டு தோலை அன்புடன் கிருஷ்ணருக்குத் தந்தாள். அதை வாங்கிச் சாப்பிட்ட கிருஷ்ணர் மகிழ்ந்தார். இதைப் பார்த்துப் பதறிப்போன விதுரர் மனைவியை நோக்கிக் கோபமான பார்வையை வீசவே, கிருஷ்ணர் விதுரா நான் அன்பிற்கு மட்டுமே கட்டுப்படுவேன். எனக்கு உள்ளன்புடன் ஒரு துளி நீர் ஒரு இலை ஒரு பழம் எதைத் தந்தாலும் அதுவே எனக்குப் போதும் என்று அருளினார். உள்ளன்புடன் அனாவசிய சண்டைகள் அற்ப விவாதங்கள் இல்லாத இடத்தில் உணவு சமைக்கப்பட வேண்டும். சமைக்கும்போது கணவரை குழந்தைகளை நினைத்து வாழ்த்தி, அவர்கள் ஆரோக்கியமாக இருக்கவேண்டும் என்று நினைத்து சமைத்தல் வேண்டும். அதுமட்டுமன்றி தெய்வீகமான பாடல்களைக் கேட்டுக்கொண்டே சமைக்கும்பொழுது அதனுடைய அதிர்வுகள் சமைக்கும் உணவில் உள்ள தண்ணீரினால் உள்வாங்கப்படுகிறது. இறைவனை நினைத்துக் கொண்டே சமைக்கும்பொழுது நம்முடைய குடும்பத்தினருக்கு குழந்தைகளுக்கு இறை உணர்வு உணவின் வழியாக கொடுக்கப்படுகிறது. அசுத்தமான சூழ்நிலையில் நாம் சுவாசிக்கும் பொழுது, அசுத்தமான தண்ணீர் குடிக்கும்பொழுது, அசுத்தமான உணவை உண்ணும்பொழுது நம் உடல்நிலை பாதிக்கப்படுகிறது. அதுபோல் நாம் கோபத்துடன் சமைப்பது, வேண்டா வெறுப்புடன் சமைப்பது போன்றவை நம் குடும்பத்தினருக்கு, தேவையில்லாத உணர்வுகளை கொடுக்கின்றது. நம் குடும்பத்தில் பிடிவாதம் பிடிக்கும் குழந்தைகள், முரட்டுத்தனமாக நடக்கும் குழந்தைகள், கோபப்படும் கணவர், மாமியார் போன்றவர்கள் நாம் அன்புடன் வாழ்த்தி சமைக்கும் உணவினால் தெய்வீக பாடல்களை கேட்டுக்கொண்டே சமைக்கும் உணவை உண்பதினால், அவர்களுடைய எண்ணங்களில் செயல்களில் மாற்றம் ஏற்படுவதை உணரமுடியும். எனவே அவசர அவசரமாக பரிமாறாமல், தொலைக்காட்சி பார்த்துக்கொண்டே பரிமாறாமல், குழந்தைகளும் கணவரும் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டே சாப்பிடாமல், குடும்பமாக ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடும்போது ஆரோக்கியமான உடல்நிலை மட்டுமல்ல மனநிலை மற்றும் நற்பண்புகள், நற்குணங்கள், தெளிவாகப் பேசும் தன்மை, தெளிவாக முடிவு எடுக்கும் தன்மை போன்ற மாற்றங்கள் குடும்பத்தினரிடம் ஏற்படுவதை உணரலாம்.

*கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதியில் வெற்றிக்கு உரியவர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 71

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 குடித்துக் கூத்தாடிக் குதூகலம் அடையுமுன்னர்
வடித்தகஞ்சி குடிப்பதற்கே வகையிலாரை எண்ணிடுவீர்
முடிவதனில் குடிநம்மைக் குடித்துமே மகிழ்ந்திடலாம்
விடிவினை இருளாய் மாற்றும் குடிநீத்தால் குடிகள் வாழும்.

02 காயோடு கனிபறித்துக் களித்துண்டு மகிழவேண்டில்
பூவோடு பிஞ்சிருக்கும் மரந்தறித்தல் ஆகாது
தாயோடு தந்தையும் பிள்ளைகளும் மகிழ்ந்திருப்பின்
வாயோடு வருங்கோபம் வார்த்தையாகல் ஆகாது.

03 பொறுமையின் பெறுமதி பொறுத்துத்தான் தெரியவரும்
கோபத்தின் பெறுமதியோ கூடவே தெரிந்துவிடும்
கூடவே தெரியவரும் கூடாத வழிவிடுத்து
பொறுமையினைக் காத்திடுவீர் பொறுத்துப்பலன் தெரியவரும்.

04 நம்வீட்டு மாங்கிளைகள் அயல்வீட்டில் காய்காய்த்தால்
மாவினையே தறித்தெறியும் மனப்பான்மை மாறவேண்டும்
இறைவீட்டுச் சூரியனார் யார் வீட்டில் எறிக்கவில்லை
அவருமதைத் தடுத்துவிட்டால் யார்வீடு ஒளிருமிங்கே.

05 நம்வீட்டுப் பூவாசம் பிறர்மூச்சுள் புகுந்துவிட்டால்
பூவினையே பறித்தெறியும் மனப்பான்மை மாறவேண்டும்
இறைவீட்டுப் பிராணவாயு யார்மூச்சில் புகவில்லை
அவருமதைத் தடுத்துவிட்டால் யார்மூச்சு மிஞ்சுமிங்கே.

06 நம்வீட்டு மின்விளக்கு பிறர்வீட்டில் ஒளிகொடுத்தால்
மறைப்பிட்டு அதைமறைக்கும் மனப்பான்மை மாறவேண்டும்
இறைவீட்டுச் சந்திரனார் யார்வீட்டில் காயவில்லை
அவருமதைத் தடுத்துவிட்டால் யார்வீடு மிளிருமிங்கே.

*எதையும் பெரிதுபடுத்தாமல் பழகி விட்டால் வாழ்க்கை இனிமை தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 நம்வீட்டு நீரூற்று பிறர் வீட்டில் ஊற்றெடுத்தால்
ஊற்றினையே அடைத்துவிடும் மனப்பான்மை மாற வேண்டும்
இறைவீட்டுக் கார்மேகம் யார்வீட்டில் பெய்யவில்லை
அவருமதைத் தடுத்து விட்டால் யார்தாகம் தீருமிங்கே.

08 இருப்போற்கு கொடுப்பதெல்லாம் வேண்டாத ஒன்றாகும்
இல்லாற்குக் கொடுப்பதுவே கொடையென்று ஆதல்போல்
அறிஞர்களிற்கும் பெரியோற்கும் அறிவுரைத்தல் மடமையாகும்
நெறிதவறிப் போனோற்கே அறிவுரைத்தல் கொடையாகும்.

09 விருந்திற்கு மருந்துண்ணல் வேண்டாத ஒன்றாகும்
மருந்திற்கு மரியாதை வருத்தத்திற் குண்பதில் போல்
புரிந்தோற்கும் புனிதற்கும் போதனைகள் பொழுதுபோக்கு
புரியாற்கே போதனைகள் புனிதராக்கும் பெரும்பேறு.

10 பாதைகள் புரிந்தோற்கு வழிகாட்டல் பகல்விளக்கு
திசையறியா திருப்பவற்கே திசைகாட்டல் கலங்கரை போல்
பக்தியில் திளைப்பவற்கு பக்கத்துணை இடையூறு
புத்தியில் குறைந்தோற்கே புத்திமதி பெரும்பேறு.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாவித நலமும் தரும் ஏகாதசி விரதம்

*– திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள் –*

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல காத்தற் கடவுளான ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியின் திருவருள் பெற்றுய்ய, எல்லாவித நலமும் பெற ஒரு விரதம் இருக்கின்றது. அதுதான் ஏகாதசி விரதம்.

இந்த விரதம் வளர்பிறை தேய்பிறைகளின் பதினோராம் நாள் அனுட்டிக்கப்படுகின்றது. இது ஒரு புனிதம் வாய்ந்த புண்ணியம் தரும் விரதமாகும். நாராயண மூர்த்தியின் நல்லருள் பெற்றுய்ய அனுகூலமாகும் அற்புத விரதம் இதுவாகும்.

இவ்விரதத்தை அனுட்டிக்க விரும்பினால் காலையில் எழுந்து புனித புண்ணிய நீராடித் தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து விநாயக வணக்கத்துடன் ஆரம்பிக்கலாம். ஆலயம் சென்று நாராயணப் பெருமானைத் தரிசனஞ் செய்து கற்பூர தீபாராதனையைக் கண்டு தொட்டு வணங்கி அன்று முழுவதும் உணவருந்தாது விஷ்ணு தோத்திரங்களைப் பாராயணஞ் செய்து மாலையில் திருவிழா நிறைவுக்கு வந்த பின்பு பாறணை பண்ணலாம்.

பெருமாள் கோயிலுக்குச் சென்று நாராயணனைத் தரிசித்து அவருடைய துதிகளைச் சொல்லி வணங்குதல் வேண்டும். வேறு அவச் சிந்தனைகள் அறவே வரக்கூடாது. இந்த ஏகாதசி நன்னாளில் விரதமிருந்து வணங்குகின்றேன். எனக்கு சகல சௌபாக்கியங்களையும் அருளிச் செய்யவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தல் வேண்டும். பின்பு துளசி தீர்த்தம் பருகி விரதத்தை பூர்த்திபண்ணலாம்.

இவ்வாறு நோன்பு காக்கும் ஏகாதசி விரத மகிமை பற்றிய வரலாற்றுப் புராண சான்றாதாரங்கள் பலவும் வழக்கிலிருக்கின்றன. ஒவ்வொரு மாதமும் வருகின்ற ஏகாதசிகளில் விரதம் இருக்க முடியாதவர்கள் மார்கழி மாதத்திலே வருகின்ற "சுவர்க்கவாயிலேகாதசி" எனப்படும் வைகுண்ட ஏகாதசி விரதத்தை முறையாக அனுட்டித்தல் வேண்டும்.

சூரியகுல வம்சத்து மரபில் வந்த அரசன் ஒருவன் கோசல நாட்டை ஆண்டு வந்தான். அவன் புராணங்கள் வாயிலாகவும் துளசி, வில்வம், வன்னி, பாதிரி முதலாய பூக்கள் பத்திரங்கள் மூலமாகவும் அர்ச்சிப்பவர்கள், நந்தவனம் அமைப்பவர்கள் போன்ற திருத்தொண்டில் ஈடுபடுபவர்கள் இறைவன் திருவடியை அடைந்து இன்புற்றிருப்பார்கள் என்பதை அறிந்திருந்தான். ருக்மாங்கதன் என அழைக்கப்பெறும் இந்த அரசன் ஓர் அழகான நந்தவனத்தை அமைத்தானாம். அதிலே சகல பூமரங்களையும் உண்டாக்கி அழகாக்கினான்.

இப்பூந்தோட்டத்தின் சிறப்பைக் கண்ட தேவலோகப் பெண்களும் அரம்பையர்களும் இந்திரனுடைய பூசைக்காக இங்கே வந்து மலர்களைப் பறித்துச் சென்றனராம். இதன் காரணமாக தினமும் அந்த நந்தவனத்தில் பூக்கள் குறைய ஆரம்பித்தன. மலர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்தபடியால் அந்தணர்கள், அடியவர்கள் ருக்மாங்கதனிடம் முறையிட்டனர். அதனால் கவலையடைந்த மன்னவன் தோட்டத்துக்குக் காவல் போட்டான். அதிகாலையிலே சென்று பார்த்தால்கூட மலர்களைக் காணவில்லை. அத்தனையும் மாயமாய் மறைந்துவிடுவதைக் கண்டு திகைத்தான்.

உடனே ஓர் ஆணையிட்டான். அதாவது பூந்தோட்டக் காவலர்களை அழைத்து "இன்னும் மூன்று தினங்களுக்குள் மலர்கள் எப்படிக் காணமாற் போகின்றன? என்பதைக் கண்டுபிடித்துத் தராவிட்டால் தண்டனை வழங்கப்படும்" என்று. மூன்று தினங்கள் பூர்த்தியாகின. காவலர்கள் பயந்து பூந்தோட்டத்தில் தவம் இருந்த முனிவரைக் கள்வன் என்று ஜோடித்து அரசனின் முன்னே நிறுத்தினர்.

உடனே அரசன் முனிவரை வணங்கி தவறுக்கு மன்னிப்புக் கேட்டான். "தவ சிரேஷ்டரே! இந்த மூடர்கள் அறியாமையால் செய்த பிழையைப் பொறுத்து அருள்புரிய வேண்டும்" என்று பணிந்தான். அப்போது சுவாமி! பூந்தோட்டத்து மலர்கள் மறைவது ஆச்சரியமாக இருக்கின்றது. அதனை அறிய விரும்புகின்றேன்" என்று வணங்கிப் பணிந்தான்.

அப்போது அந்த முனிவர், "அரசே! இந்திரனுடைய பூஜைத் தேவைக்காக அரம்பையர்கள் தினசரி வந்து மலர்களைப் பறித்துச் செல்கின்றனர்" என்று கூறினார். அதைக் கேட்டு அரசன் தேவரீர் அவர்களைக் காண்பதற்கான ஓர் உபாயத்தை உணர்த்தி அருள வேண்டும்" என்றான்.

"அரசே! பூந்தோட்டத்தில் கொம்மடிச் செடியை வளர்க்க வேண்டும். அரம்பையர் பூப்பறிக்கும்பொழுது பாதத்தில் தீண்டினால் அவர்கள் தேவ தத்துவத்தை இழந்து செல்லமுடியாமல் நிற்பர். அவ்வேளை காணமுடியும்" என்று சொல்லிவிட்டு தமது ஆச்சிரமத்துக்குச் சென்றுவிட்டார்.

அதைக் கேள்வியுற்ற மன்னவன் கொம்மடிச் செடியைப் பூந்தோட்டத்தில் நட்டு உண்டாக்கினான். ஒருநாள் அதிகாலை தேவலோகமாது கொம்மடிச் செடியில் சிக்கினாள். அதைக்கண்டுகொண்ட அரசன் ஓடோடி வந்து அப்பெண்ணை விசாரித்தான். அதற்கு அப்பெண் "அரசே! இந்திரனுடைய பூஜைத் தேவைக்காக மலர்களைப் பறிக்க வந்தோம். அப்போது கொம்மடிச் செடியில் பாதம் பட்டதால் தேவ தத்துவத்தை இழந்து தவிக்கின்றோம். என்னுடன் வந்தவர்கள் சென்றுவிட்டார்கள்" என்று கவலைப்பட்டுக்கொண்டு கூறினாள்.

அதனால் மனம் வருந்திய மன்னவன், "இத்தோஷம் நீங்குவதற்கு மார்க்கம் ஏதேனும் உண்டா?" என்று வினாவினான். அதற்கு அவள், "இந்த உலகிலே ஏகாதசி விரதம் அனுட்டித்தவர்கள் யாவராயினும் அந்த விரதத்தின் ஒருநாள் பயனை அடியேனுக்கு அளிப்பாராயின் இத்தோஷம் நீங்கும்" என்றாள். உடனே அரசன் ஏவளாலர்களை அழைத்து ஏகாதசி விரதம் நோற்பவரை அறிந்து அவரை அழைத்து வரும்படி கூறினான். எல்லா இடமும் சென்று தேடியும் ஏகாதசி விரதம் நோற்பவரைக் கண்டிலர். இதனை அறிந்த தேவமாது அரசனிடம் "உங்களை இளவயதில் வளர்த்த செவிலித் தாயை இங்கு வரச் சொல்லுங்கள்" என்றாள். உடனே அரசன் அவளை அங்கே அழைப்பித்தான். அப்போது

*விழுவதெல்லாம் எழுவதற்குத்தானே தவிர அழுவதற்கல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத் தேவமாது அந்த மூதாட்டியை நோக்கி, "அம்மணீ! உங்களிடம் ஏகாதசி விரத பலன் இருக்கிறது. அதில் பாதியை எனக்குத் தாருங்களேன்" என்று இரந்து வேண்டினாள். அதுகேட்ட அம் மூதாட்டியோ "நான் அந்த விரதத்தை ஒருபோதும் அனுட்டிக்கவில்லை" என்று பகர்ந்தாள்.

அதுகேட்ட தேவமாது, "அம்மா! முன்னொருநாள் அந்த மன்னனின் தந்தை உன்னைக் கோபித்தான். அது உனது மனத்தை வருத்தியது. அதன் காரணமாக அன்று முழுநாளும் உணவு உண்ணாது மறுநாள் போசனம் செய்தாய். அவ்வாறு நீ பட்டினி கிடந்த நாள் ஏகாதசியாகும். அவ்விரதப் பலன் உன்னிடம் உண்டு. அதில் அரைவாசியை எனக்கு அளித்தல் வேண்டும்" என்று கேட்டாள். அதைக் கேட்ட அந்த மூதாட்டி மிக மனம் மகிழ்ந்து தன்னுடைய விரத பலன் முழுவதையும் அத் தேவமகளுக்கு தாரைவார்த்துக் கொடுத்தாள். அவ்வேளை அப் பலனைப் பெற்ற தேவமாது தான் இழந்த தேவதத்துவத்தை மீளவும் அடைந்து உடனே விண்ணுலகைச் சென்றடைந்தாள். அப்போது ருக்மாங்கதன் இவற்றையெல்லாம் கண்டு மிக்க ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தான். அன்றுமுதல் எல்லோரும் ஏகாதசி விரதம் அனுட்டிக்கவேண்டும் எனக் கட்டளையிட்டான். அத்தோடு தானும் விரதம் நோற்று வந்தான். புத்திபூர்வமாகவேனும் அபுத்திபூர்வமாகவேனும் இவ்விரதத்தை அனுட்டிப்பதால் ஏற்படும் பலன் விளங்குகின்றது அல்லவா! எவ்வகைப் பாவம் செய்தவர்களும் இந்தப் புனித புண்ணிய ஏகாதசி விரதத்தை விதிப்படி முறையாக அனுட்டித்தவர்களும் பாவ நிவர்த்தி அடைந்து மேலான பதவியை அடைவார்கள்.

பஞ்ச பாண்டவர்களில் வீமனும் ஒருவன். இவன் ஏகாதசி விரதம் அனுட்டிக்க விரும்பி வியாசரிஷியிடம் வழிகேட்டான். அவர் "மாசி மாதத்திலே வருகின்ற வளர்பிறை ஏகாதசியை முறைப்படி அனுட்டிப்பாயாக" என ஆசி நல்கினார். அவனும் ஏகாதசியை அனுட்டித்து நற்பயனை அடைந்தான். வீமன் நோற்ற விரதம் என்பதால் "வீம ஏகாதசி" என்று அழைக்கப்படுகிறது.

இத்தகைய அருமையும் பெருமையும் மிக்க ஏகாதசி விரதத்தை முறையாக அனுட்டித்து வாழ்விலே வசந்தத்தை ஏற்படுத்தி நற்பயன் பெற இந்துக்களாகிய நாம் அனைவரும் நற்கதி பெற்றுச் சுகமே வாழ நம்மை நாமே தயார்ப்படுத்திக்கொள்வோமாக.

## திருப்புகழின் குருநாதனே வேல் முருகா

கருவாகித் தாய்வயிற்றில் உருவாகி - ஊரில்
கருத்து மேவிப் பல பேருடன் உரையாடி
வருவாய்க்குப் பலதொழில்கள் செய்தேனே முருகா
வயது முதிர்ச்சியிலும் உனை நம்பித் தொழுகின்றேன் முருகா
குருவாகி சந்நிதியில் வழி காட்டினாய் - எம்
குலம் தளைக்க அருள்கூட்டி ஒளி ஊட்டினாய்
திருவாயால் எம் மனம் பொங்க வரம் தாராயோ - தேன்
திருப்புகழ் பிறக்க வழிதந்த குரு தெய்வமே முருகா.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*உழைப்புக்கு பலன் பொதுவாய் கிடைத்தாலும் அது என்றும் உயர்வாய்தான் பேசப்படும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதம் காட்டும் வழி

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

வேதத்தை அடிப்படையாகக் கொண்ட சமயங்கள் வைதீக சமயங்கள் எனப்படுகின்றன. வடமொழிதான் வேதங்களுக்கு ஆதாரமாக அமையினும் தமிழ் மக்கள் சமய ரீதியாக வேதநெறியை ஏற்றுக்கொள்ளாமல் இல்லை. தமிழ் மக்களுள் பெரும்பாலானோர் சைவ சமயத்தை மேற்கொண்டுள்ளனர். இருப்பினும் அவர்கள் வடமொழி வேதங்களை ஏற்றுக் கொண்டதன் காரணம், சைவத்தின் பல கருத்துக்களுக்கும் வேதங்கள் கூறும் கருத்துக்களுக்கும் பலவகையிலும் பொதுத்தன்மை பரவலாக இருப்பதேயாம்.

வேதங்கள் நான்காக வகுக்கப்பட்டமைக்கும் தக்க காரணங்கள் உண்டு. காரணம், அவை ஒவ்வொன்றும் மேற்கொண்டிருக்கும் ஆத்மீக முன்னேற்றப் பணிகள்தான்.

இருக்கு வேதம் என்னும்போது அது தெய்வங்களைப் பாடல்களால் துதிசெய்யும் சுலோகங்களைக் கொண்டுள்ளது. "ருக்" என்றால் துதித்தல் என்று பொருள்

"யசுர்" என்னும்போது யாகம் என்று பொருள் அமையும். பெரும்பாலும் யாகம் செய்வது பற்றிய வழிமுறைகளை, விளக்கங்களைத் தரும் சுலோகங்களை, இப்பகுதி தன்னிடத்தே கொண்டுள்ளது.

சாமம் என்பது வேதத்தின் மூன்றாவது பிரிவாகும். சாமம் என்ற சொல்லுக்கு இசை என்று பொருள் கொள்ளலாம். சாம வேதப் பகுதியில் உள்ள சுலோகங்கள், இசையுடன் பாடக்கூடிய துதிப் பாடல்களாகவே அமைந்துள்ளன.

அடுத்து அதர்வண வேதம். அதர்வணம் என்பது மாந்திரீகத்தைக் குறிக்கும் சொல்லாம். மாந்திரீகம் இறைவனின் அருளைப் பெறுவதற்கான நுணுக்கமான செயல் முறைகளைக் கொண்டுள்ளன.

வேதத்தின் மிகச் சிறப்பான மூன்று அம்சங்கள் கடவுள், ஆன்மா, உலகம் என்னும் மூன்றுமாம். சைவசமயமும் பதி, பசு, பாசம் என்னும் வகையில் இம்மூன்றையும் உண்மைப்பொருளாகக் கொண்டுள்ளது. இதையே சைவ சித்தாந்தமும் சொல்லியுள்ளது.

வேதத்தின் பல பெயர்களுள் ஒன்றான "அபௌர்ஷேயம்" என்பதிலிருந்து வேதம் மனிதர்களால் உருவாக்கப்படாதது என்பதை யாம் அறிய முடிகின்றது.

வேதத்தின் முக்கிய பகுதி மந்திரங்கள். மந்திரம் இல்லாத பூசைகள் இன்று எம் ஆலயங்களில் இல்லை. மந்திரங்களை மனிதன் பயன்படுத்த நேர்ந்த சந்தர்ப்பமே ஒரு அலாதிதான்.

ஆரம்பத்தில் மனிதனால் இயற்கை அம்சங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று என்பவற்றை புரிந்துகொள்ள முடியவில்லை. எனவே இயற்கையின் செயற்பாடுகளும் மாற்றங்களும் தெய்வ அம்சம் பொருந்தியவை என்பதை மனிதன் நம்பினான். இந்த நோக்கில் இவற்றை வழிபடவும் செய்தான். இயற்கையின் சீற்றங்களான இடி, மின்னல், முழக்கம்,

*கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதிக்கு வெற்றி உரியவர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேகங்கள், கடல் ஆகியவற்றைத் தெய்வங்களே இயக்குகின்றன என்பது ஆதி மனிதனின் அசையாத நம்பிக்கை.

தவறு செய்வோரை இடி, முழக்கம், பெருமழை ஆகியவற்றால் தெய்வங்கள் தண்டிக்கின்றன என்றும் மனிதன் முடிவு செய்தான்.

இந்த நிலையில் தெய்வங்களை சினம் அடையாமல் அவர்களை அமைதிப்படுத்தித் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள மனிதன் மேற்கொண்ட முயற்சிதான் இந்த மந்திரங்கள்.

மனிதன், தெய்வங்களின் மனம் குளிர, அவர்களைப் போற்றிப் புகழ்ந்து துதி செய்தான். இதனால் அவற்றின் ஆவேசம் குறையும் எனவும் நம்பினான். தொடர்ந்து இத் தெய்வங்களுக்கு காணிக்கை செலுத்தினால் அவர்களைச் சாந்தப்படுத்தலாம் என முடிவும் செய்தான். தெய்வங்களுக்கும் மனிதனுக்கும்தான் நேரடித் தொடர்பு இல்லையே. எனவே அக்கினி மூலம் இக்காணிக்கைகளைச் செலுத்த மனிதன் முயற்சித்தபோதுதான் யாகங்கள் செய்யும் வழிமுறை ஆரம்பமானது. மனிதனது ஒவ்வொரு செயலையும் தெய்வம் எப்போதும் கண்காணித்து வருகின்றது, என்றும் அன்றைய மனிதன் நம்பினான். ஏன் இன்றும் நாம் இக் கருத்தினை ஏற்கத்தானே செய்கிறோம்!

இந்த கண்காணிப்புப் பணியை வருணன் மேற்கொண்டிருப்பதாகவும் சூரியனே அவனது கண் எனவும் மனிதன் ஏற்றுக்கொண்டான். தம் தவறுகளை மன்னிக்குமாறு தெய்வங்களை இறைஞ்சிக் கேட்க மனிதனுக்கு மந்திரங்கள் பயன்பட்டன. வேத காலத்தில் பல தெய்வங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளன. அன்றிலிருந்து பல தெய்வ வழிபாடு தோன்றலாயிற்று. இந்நிலையில் தெய்வம் ஒன்று அதனையே அறிஞர்கள் பல்வேறு பெயரால் குறிக்கின்றனர். "ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி" என்னும் ஸ்லோகமும் வேதத்தில் உண்டு.

எது எப்படியிருப்பினும் புரிந்தோ, புரியாமலோ தெரிந்தோ தெரியாமலோ இவற்றின் பிரதிபலிப்பு சற்று முன்னேற்றத்துடன் எம்மிடையே நிலவி வருதல் கண்கூடு. எப்படிப் பார்த்தாலும் எமக்கு மேலே ஒரு தர்ம சக்தி உள்ளது என்று நம்புகின்றோம் அல்லவா. எனவே அவ்வுயர், சக்திக்கு பயந்து பணிந்து நியாயமாக நாம் ஒவ்வொருவரும் நடப்போமானால் அது அல்லவா மெய்ச்சமயம். இல்லையா?

---

இன்ப துன்பங்களின் கலவைதான் வாழ்க்கை. இவ்விரண்டையும் ஒன்றாகவே ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் மக்களிடம் இருக்கவேண்டும். புராணங்களும், இதிகாசங்களும் இந்தக் குறிக்கோளையே வலியுறுத்துகின்றன. இரவுக்குப்பின் பகல்போல் துன்பத்துக்குப் பின் இன்பம் தோன்றும். இன்பம் கலக்காத துன்பமோ, துன்பம் கலக்காத இன்பமோ ஒரு மனிதனின் வாழ்க்கையில் தென்படாது. முழு வாழ்க்கையும் இன்பத்தில் திளைக்க அவகாசமில்லை. அதேபோல் துன்பத்தில் தோய்வதற்கும் இடமில்லை. மோசமான விளைவுகளினால் துன்பம் ஏற்படும்போது, அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள். அப்படி ஏற்றுக்கொள்ளும்போதுதான் அதிலிருந்து வெளிவருவதற்கான புதிய ஆற்றல்கள் உங்கள் மனதிற்குள் ஊற்றெடுக்கும். எனவே துன்பமான நேரங்களில் துவண்டுவிடாதீர்கள்.

*உன் விதியை நீயே நிர்ணயம் செய். இல்லையென்றால் மற்றவர்கள் நிர்ணயித்து விடுவார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறஞ்செய விரும்பு - ஆத்திசூடி மகாவாக்கியம்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

"என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் ஓர் அருமையான, பொருள் நிறைந்த மகுடவாசகத்தை அப்பர் அடிகள் நமக்கு வழங்கியுள்ளார். அடிகளார் தாம் உழவாரப்பணி போன்ற பல சமய சமூகத் தொண்டுகளையும், உணவு வழங்குதல் போன்ற தெய்வீகத் தொண்டுகளையும் வழங்கியவர்; சரியை நெறியில் நின்று ஒழுகியவர்; அன்னார் தமது அநுபவத்திலிருந்து பெற்ற உண்மைகளைத்தான், தேவாரங்கள் முக்கியமாக திருத்தாண்டகங்கள் வாயிலாக நமக்கு வழங்கியுள்ளார். இறைவன் திருவருளினாலேயே யாவும் நடைபெறுகிறது என்ற உண்மையை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

"பணிபுரி, பலனை எதிர்பாராதே" என்பது கீதை தரும் மகத்தான அமுதவாசகம். ஏதாவதைக் கைம்மாறு ஆக, எதிர்பார்த்துக் கருமமாற்றும் மனிதர்கள், வாழுகின்ற தற்காலத்தில் இத்தகைய நல்லனவற்றை உபதேசிக்கும் ஆன்றோர் மகுடவாசகங்கள், புறக்கணிப்புக்கு உள்ளாகின்றன. ஆயினும், மக்களால் அவ்வாசகங்கள் இன்னமும் மறக்கப்படவில்லை என்பது மட்டும் உண்மை. ஏனென்றால், மேடைப் பேச்சுக்களிலும், கட்டுரை நூல்களிலும், ஊடகங்களிலும் அம் மகுடவாசகங்கள் தாராளமாகக் கையாளப்பட்டும்; புழக்கத்திலிருந்தும் வருவதைக் காணமுடிகிறது. பாடசாலை மாணவர்களும்; தாம் வரையும் கட்டுரைகளிலும்; மற்றும் சொல்லாடல்களிலும் மறக்காமல் கையாளுகின்றனர்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"
-திருக்குறள்.

"இச்செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம்" என்று சொல்லுதல்; புத்திமதி கூறுதல்; எவர்க்கும் எளிது; இலகுவான வேலையும் ஆகும். சொல்லியபடி செய்தல்; செய்து முடித்தல், அரியவாம் என்பது இக்குறட்பா தரும் பொருள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள, மனித விழுமியங்களின் நிலைப்பாட்டினை இன்றைய சூழ்நிலையில் வைத்துச் சிந்தித்துப் பார்த்தால் தற்காலத்தில் அவற்றைத் தம் வாழ்க்கையில் அநுசரித்தும் கடைப்பிடித்தும் ஒழுகுபவரின் தொகை பெரிதும் குறைந்து வருவதைக் காணலாம்.

"நாம் வாழும் யுகம்; கலியுகம்; மனித வாழ்வு அப்படித்தான் கேவல நிலையை அடையும்" என்று கூறித் தப்பித்துக்கொள்கிறார்கள். தற்காலத்தில் வாழும் மூத்தோரும் அறிஞர் பெருமக்களும் இது தப்பித்துக்கொள்ளும் ஒரு சாதுரியம் ஆகும். "மௌனம் கலக நாஸ்தி" இக்காலத்துக்கு மிகவும் பொருந்தும் பழமொழி ஆகும். எவர்க்கும் இடையூறுகளை விளைவிக்காமல் சரி, பிழை சொல்லாமல் தானும் தன் பாடுமாய் ஒதுங்கி இருந்துவிட்டால்

*நம்பிக்கை கடவுளையும் அசைக்கும். பயம் எதிரியையும் செயல்பட வைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை இல்லை. குடும்பத்திலும் சரி; தொழில் புரியும் அலுவலகம் மற்றும் வாழும் சமூகத்திலும் சரி எதிலும் தலையிடாமல் ஒதுங்கி வாழ்ந்து வந்தால் வாழும் எஞ்சிய நாட்களை ஒரு மாதிரி ஓட்டிவிடலாம். அல்லது பிரச்சினைகளுக்கும் நெருக்குகைகளுக்கும் உட்பட நேரிடும். அமைதி குலைந்துவிடும் என்று தற்காலத்தில் பலர் எண்ணுகிறார்கள்.

"பணிபுரி, பலனை எதிர்பாராது"; "என் கடன் பணிசெய்து கிடப்பதே" மகுட வாசகங் களைத் தற்காலச் சூழ்நிலையில் வைத்து, ஆராய்ந்து பார்த்தால் எவ்வளவு தூரம் அவை அன்றாடம் நடைமுறையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றன என்பது தெரியவரும். உண்மைநிலை யாதெனில் அவை செத்து மடிந்து பல ஆண்டுகள் கடந்துவிட்டன என்பதேயாகும். இன்றைய சூழ்நிலையில் பெரும்பாலானோர் "தமக்கு எவ்வளவு தேறும்" என்பதைக் கருத்திற்கொண்டுதான் ஒரு கருமத்தை ஏற்று அதனைச் செய்துமுடிக்கிறார்கள். இதனிலும் பார்க்க வேடிக்கை, விநோதம் என்னவென்றால் பெரும்பாலானோர் பலனைக் கையில் பெற்றுக்கொண்டதை உறுதி செய்த பின்னரே பணிசெய்ய ஆரம்பிக்கின்றார்கள்.

கைலஞ்சம், கைக்கூலி என்பன இந்தவகையிலேயேதான் இன்று பெருகியும் பரந்தும் காணப்படுகிறது. செயலுக்கேற்ற விளைவு உண்டு. "வினை விதைத்தவன், வினையறுப்பான்" "தினை விதைத்தவன் தினை அறுப்பான்" செயல்விளைவுத் தத்துவம் ஒவ்வொரு செயலுக்கும் விளைவு உண்டு என்பதை ஆதாரபூர்வமாக நிருபிக்கிறது. ஆன்மீகமும் அறிவியலும் ஒன்றிற் கொன்று முரண்பட்டவையன்று என்பதை இவை எடுத்துக்காட்டுகின்றன. சுருங்கக் கூறின் நல்லொழுக்க விழுமியங்களை வாழ்வில் கடைப்பிடிக்க மறுப்பவர்கள்; நல்லபடி வளமான வாழ்வினை வாழ மறுக்கிறார்கள் என்பது தெளிவு. கைலஞ்சம் பெறுதல் என்பது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றச்செயல். பெறுதல் மட்டுமன்றிக் கொடுத்தலும் குற்றம்.

சைவசமய சாஸ்திரங்கள் கூறும் விதிப்படி கைலஞ்சம் பெறுதலும் கொடுத்தலும் தெய்வதண்டனைக்குரிய குற்றம் ஆகும். அது நியதி. நல்வினைக்கு நன்மைகளும்; தீவினைக்கு தண்டனையாக தீமைகளும் ஏற்படுவதை எவராலும் தடுக்கமுடியாது. அது இயற்கைச் சட்டம். இங்கு இறைவனுக்கு இலஞ்சம் கொடுத்து தப்பித்துக்கொள்ள முடியாது. கடவுள் எல்லாம் அறிபவர், எங்கும் நிறைந்தவர்.

"கற்பகத்தைச் சேர்ந்தார்க்குக் காஞ்சுரங்காய் ஈய்ந்ததேன்?
முற்பவத்திற் செய்த வினை"
-ஔவையார்.

"செயலுக்கேற்ற விளைவு" நிச்சயம். இவ்வுண்மையை உணர்ந்தவர்கள் நல்வாழ்வு வாழ விரும்பியவர்கள் நிச்சயம் தீய செயல்கள் புரியவும், பிறரைத் துன்புறுத்தவும் விரும்பமாட்டார்கள். "அறஞ்செய விரும்பு" என்று மொழிந்த ஔவையார்; அதைத் தொடர்ந்து "ஆறுவது சினம்" என்று கூறுகிறார். சினம் கொள்ளுதல்; தீய செயல்களில் ஈடுபடுவதற்கு அறம் அல்லாத செயல்களைச் செய்வதற்குத்; தூண்டுகோல் ஆக அமையும் என்பதைத் தெரிந்துதான் அவ்வாறு மொழிந்தார். பிராப்தவினைகள், நல்வினையோ, தீவினையோ அவற்றை அனுபவித்துத்தான் தீர்க்கவேண்டும் என்பது நியதி. சைவசித்தாந்தம் கூறும் உண்மை.

*மனம் எதைத் தீவிரமாக சிந்திக்கிறதோ அதுவாகவே மாறிவிடும் தன்மைகொண்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைநீதி என்றுமே பொய்த்ததில்லை. செயலுக்கு ஏற்ற விளைவை இறைநீதி வழங்கிக்கொண்டே இருக்கிறது. மனிதன் ஒவ்வொருத்தருக்கும் பிராரப்த வினைகளுக்கேற்ப விதிக்கப்பட்ட கடமைகள் உள்ளன. அவற்றைச் செய்துவர வேண்டும். கடமைகள் உரிய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அவற்றை அலட்சியம் செய்தல் பாவ காரியம் ஆகும். ஒவ்வொரு குடிமகனும் தம் தம் கடமைகளை முட்டின்றி முடித்தல்தான் "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்பதன் உள்ளடக்கம். "கடமை" என்பது, "கடன் திருப்புதல்" பட்ட கடனைத் திருப்புதல் என்று பொருள் கொள்ளப்படுகிறது. அதாவது கடன் தீர்த்தல் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் குற்றம் தப்பு என்றும், தவறு என்றும் கூறப்படுகிறது.

பிறருக்கு எவ்வகையிலும் தெரிந்தோ தெரியாமலோ வேண்டுமென்று திட்டமிட்டுச் செய்யும் குற்றம், சதி என்று கூறப்படுகிறது. அதுக்குத் தண்டனையை அநுபவித்துத்தான் ஆகவேண்டும். இப்பிறவியில் இல்லாவிட்டாலும் அடுத்துவரும் பிறவிகளில் அவற்றை அநுபவிப்பர். சைவசமயிகள் கன்மம் என்றும் பிராரப்தவினை என்றும் அழைப்பர்.

தற்காலத்தில் விஞ்ஞானமும் அதனை "ஒவ்வொரு செயலுக்கும் ஒரு எதிர்வினை உண்டு" என்று ஆய்வுமூலம் கண்டுபிடித்துள்ளது.

கன்மவினையை இப்பிறவியில் அனுபவித்துத் தீர்க்கப்படாவிட்டால், அதற்குச் சஞ்சிதம் என்று பெயர். "சஞ்சித வினைகளும் இந்தப் பிறவியில் செய்கின்ற புதுவினைகளும் அவற்றை அனுபவித்துத் தீர்க்கும்வரை தொடரும். "செயலுக்கேற்ற விளைவு" "ஒவ்வொரு செயலுக்கும் ஒரு எதிர்வினை உண்டு" என்னும் விதிகள் தப்பாமல் சித்திக்கும். இதில் ஆன்மிகமும் விஞ்ஞானமும் ஒன்றுக்கு மற்றையது முரண்படாமலும், எதிரும் புதிரும் ஆக முரண்படாமலும் இருக்கும் நிலையினைக் காணமுடிகிறது. சைவசமயம் மெய்ச்சமயம் என்பதை நிரூபிக்க சைவசித்தாந்தம் உறுதுணையாக உள்ளமை இதிலிருந்து தெளிவாகின்றது.

சைவசமயம் ஒரு வாழ்க்கை நெறி. "வையத்தில் வாழும் நெறியும் முறையும் அறிந்து வாழ்வாங்கு வாழவும், வளமாக வாழவும்; புண்ணியங்கள் சேர்க்கவும் பாவங்கள் தவிர்க்கவும்; மனிதர்களை வழிப்படுத்தி நெறிப்படுத்துவதில் வலிமைபெற்ற சமயம் ஆகும். சமயம் என்றால் பாதை, வழி, நெறி என்று பொருள் கொள்வர். சைவம் அத்தனை இலட்சணங்களையும் கொண்டுள்ளது.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு படிகள் ஊடாக, ஆன்மீக வாழ்க்கை வாழ்ந்து; அதன்பேறாக முறையே சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் ஆகிய முத்திகளைப் படிப்படியாகப் பெற்று; பிறப்பு - இறப்பு தொடரை முடிவுக்குக் கொண்டு வந்து, இன்பமும் துன்பமும்; நிலாவும் இருளும்போல; மாறி மாறி மனித வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் வந்து போவதற்கு முற்றுப்புள்ளி வைத்து; "ஈசன் எந்தை இணையடி நிழலில் முடிவில்லாத பேரின்ப வாழ்வினை வாழுதல் மனிதப் பிறவியின் உயர்குறிக்கோள் ஆகும்.

"மனிதப் பிறவியெடுத்ததன் நோக்கம் கடவுளை
வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்"

(சைவ வினாவிடை - நாவலர் பொன் வாக்கு)

*கோபத்தால் பிறருக்கு மட்டுமில்லாமல் நமக்கும் தீமையே உண்டாகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 50000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| க. தர்மலிங்கம் J.P | நீர்வேலி | 10000. 00 |
| திரு கணபதிப்பிள்ளை குடும்பம் | அல்வாய் | 1000. 00 |
| பொ. புஸ்பராசா | சங்கானை | 2000. 00 |
| சு. லக்ஷிதன் | தொண்டைமானாறு | 500. 00 |
| இ. சொக்கலிங்கம் ஆசிரியர் | நாவற்குழி | 10000. 00 |
| திருமதி தங்கராசா சரஸ்வதி | பருத்தித்துறை | 5000. 00 |
| வி. சிவஅருட்சோதி | துன்னாலை | 5000. 00 |
| S. சிவனேஸ்வரன் | இணுவில் | 60000. 00 |
| உ. பேரானந்தம் | தெல்லிப்பழை | 500. 00 |
| கி. கனகசிங்கம் | உரும்பராய் | 1000. 00 |
| தே. குணேஸ்வரன் | சிறுப்பிட்டி | 50000. 00 |
| Dr. கணேசமூர்த்தி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ஓஷன் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 6000. 00 |
| G.க. பினாஸ் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ப. பத்மகுமாரன் | நவாலி | 1000. 00 |
| V.R.K. ரட்ணசபாபதி J.P | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| தங்கராசா ஸ்ரீமூர்த்தி | உடுப்பிட்டி | 10000. 00 |
| S. பிரகாஸ் | பருத்தித்துறை | 1000. 00 |
| சு. கஜன்ராஜ் | குப்பிளான் | 1மூடை அரிசி 4000. 00 |
| த. கபில்ராஜ் | குப்பிளான் | 1மூடை அரிசி |
| ரவி தமயந்தி குடும்பம் | கொழும்பு | 5000. 00 |
| வே. தங்கமணி | தாவடி தெற்கு | 10000. 00 |
| T. அஞ்சலா | நல்லூர் | 2000. 00 |
| திரு சதீஸ்குமார் குடும்பம் | சிங்கப்பூர் | 27000. 00 |
| செ. லோகேஸ்வரி | மானிப்பாய் | 5000. 00 |
| திரு சிவானந்தன் குடும்பம் | மானிப்பாய் | 500. 00 |
| நா. நவமலர் நினைவாக | அச்சுவேலி | 5000. 00 |
| பா. மதியுகன் | ஏழாலை | 5000. 00 |

*நற்செயலில் ஈடுபடுபவர்களை கடவுள் ஒருபோதும் கைவிடமாட்டார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சு. சத்தியேந்திரன் குடும்பம் | திருநெல்வேலி | 30k அரிசி |
| ஜெயக்குமார் தேவிகா நினைவாக | கோண்டாவில் | 5000. 00 |
| R. ஶ்ரீராஜேஸ்வரன் | திருநெல்வேலி | 1000. 00 |
| இ. லிசானி | திருநெல்வேலி | 5000. 00 |
| நளினி குமாரதாசன் | கந்தர்மடம் | 500. 00 |
| நடனசீலன் அனுஷா | சாவகச்சேரி | 2000. 00 |
| திரு கைலநாதன் குடும்பம் | மானிப்பாய் | 1மூடை அரிசி |
| T. தேவமுகுந்தன் | கொழும்பு-6 | 5000. 00 |
| ஜெ. இராசகோபால் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| திரு ஆறுமுகம் குடும்பம் | உரும்பராய் | 5000. 00 |
| த. சுந்தரலிங்கம் | உரும்பராய் | 1000. 00 |
| த. மேகநாதன் | திருநெல்வேலி (கல்விப்பணி) | 3000. 00 |
| வ. தங்கவடிவேல் குடும்பம் | வவுனியா | 1000. 00 |
| க. சுகந்தி | பிரான்ஸ் 1புட்டி அரிசி | 10000. 00 |
| இ. துளசிராஜ் | லண்டன் | 15000. 00 |
| சி. சுலோசனா | கல்வியங்காடு | 5000. 00 |
| பு. தயாபரி | கோப்பாய் | 1000. 00 |
| சஞ்சீவன் கீர்த்தனா | நெல்லியடி | 5000. 00 |
| தி. பத்மராணி நினைவாக | புன்னாலைக்கட்டுவன் | 1000. 00 |
| ஜீ. சரண்யன் | கோண்டாவில் | 20000. 00 |
| திரு நவலிங்கம் குடும்பம் | புலோலி | 5000. 00 |
| வ. நவலோகநாதன் | புத்தூர் | 500. 00 |
| வ. இரத்தினசபாபதி | யாழ்ப்பாணம் | 500. 00 |
| திரு சரவணமுத்து குடும்பம் | கோண்டாவில் | 21000. 00 |
| P. சிவஞானம் | காரைநகர் | 1000. 00 |
| தாட்சாயினி கனாதீபன் | தெகிவளை | 5000. 00 |
| S. கேசவன் | ஆனைக்கோட்டை | 5000. 00 |
| S.R. லீலாவதி | பண்டாரவளை | 1000. 00 |
| திரு பழனி | பண்டாரவளை | 1500. 00 |
| புனிதவதி நேசராஜா | மட்டக்களப்பு | 15000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் | பருத்தித்துறை | 10000. 00 |
| திரு பாலதீபன் குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| திரு அருட்குமரன் | லண்டன் | 10000. 00 |
| வைஷ்ணவி, சங்கவி | லண்டன் | 2000. 00 |
| நா. ராஜகுமாரி | அச்சுவேலி | மரக்கறி, 1மூடை அரிசி |
| சீ. கமலதாஸ் ஆசிரியர் | நீர்வேலி | 3000. 00 |
| ச. விஜயரத்தினம் | பண்டத்தரிப்பு | 1000. 00 |
| செ. ஆறுமுகம் | கற்கோவளம் | 6000. 00 |

*பிரார்த்தனைகளைவிடவும் மிகவும் உயர்ந்தது பொறுமைதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தி. தயாபரன் | கந்தர்மடம் | 5000. 00 |
| திரு கருணாகரன் குடும்பம் | கோண்டாவில் | 5000. 00 |
| ச. காண்டீபன் | மானிப்பாய் (அவுஸ்திரேலியா) | 10000. 00 |
| வே. செல்வநாயகி | கோண்டாவில் | 1000. 00 |
| சி. சிவதர்சினி | ஜேர்மன் | 2000. 00 |
| ப. சரவணகோபி | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| S. ஸ்ரீபத்மராஜா | நவிண்டில் | 10000. 00 |
| ச. ஞானசம்பந்தன் | கரணவாய் | 5000. 00 |
| த. அனோஜன் | புன்னாலைக்கட்டுவன் | 5000. 00 |
| ச. வனிதா | கரணவாய் | 5000. 00 |
| S. விதுஷனசர்மா | கரவெட்டி | 1200. 00 |
| திருமதி ச. ராதாதேவி | உரும்பராய் | 500. 00 |
| S. தங்கசிவம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| வி. கோபிநாத் | கரணவாய் | 1000. 00 |
| சிவக்கொழுந்து P.M. நினைவாக | உடுப்பிட்டி | 15000. 00 |
| S. ஸ்கந்தன் | சித்தங்கேணி | 3000. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| சி. அன்புமலர் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| பு. இலட்சுமிப்பிள்ளை, பு. உதயசோதி | (கனடா) வத்தளை | 15000. 00 |
| க. தீபிகா மூலம் கற்பகநாதன் நினைவாக | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| சைவ சிறுவர் இல்லம், சைவ விருத்தி சங்கம் | திருநெல்வேலி | 6000. 00 |
| ஆ. மணிமாறன் | அராலி | 1000. 00 |
| S. விஜயசாந் | பருத்தித்துறை | 5000. 00 |
| சி. ரஞ்சன் | துன்னாலை | 10000. 00 |
| Dr தி. ஆனந்தமூர்த்தி பண்ணாகம் | சுழிபுரம் | 75000. 00 |
| தி. லலிதாவதி | சங்கானை | 10000. 00 |
| ஆ. பாலசிங்கம் | மருதனார்மடம் | 5000. 00 |
| சி. ரகுநாதன் | கனடா | 10000. 00 |
| ந. கந்தசாமி | ஏழாலை | 10000. 00 |
| த. சின்னம்மா | கரவெட்டி | 20000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 1புட்டி பருப்பு, 1மூடை அரிசி |
| K. சிவராஜா | வெள்ளவத்தை | 4000. 00 |
| ஸ்ரீ ரேணுகா, ப. வசந்தா | அவுஸ்திரேலியா (வல்வெட்டித்துறை) | 45000. 00 |
| திருமதி வேலுப்பிள்ளை | அவுஸ்திரேலியா (வல்வெட்டித்துறை) | 100000. 00 |
| ச. முரளிதரன் | அமெரிக்கா | 10000. 00 |
| த. அமலன் | கொழும்பு | 15000. 00 |
| திரு ரவிச்சந்திரா, திரு சண்முகராசா குடும்பம் | அவுஸ்திரேலியா மயிலியதனை | 23000. 00 |
| S. சத்தியரூபன் | நீர்வேலி (U.K) | 1000. 00 |

*அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சா. நிலா | கனடா | 15000. 00 |
| P. விமல் | சுதுமலை (U.K) | 10000. 00 |
| சிவராஜன் கலாதேவி | வல்வெட்டி | 5000. 00 |
| திரு மோகன் குடும்பம் | ஜேர்மன் | 35100. 00 |
| திரு கிருபா குடும்பம் | ஜேர்மன் | 17550. 00 |
| திரு விவேகானந்தா குடும்பம் | ஜேர்மன் | 17550. 00 |
| திரு தவா குடும்பம் | ஜேர்மன் | 10530. 00 |
| திரு ஜெயராஜா குடும்பம் | ஜேர்மன் | 17550. 00 |
| சின்னத்தம்பி பத்மநாதன் | ஜேர்மன் | 8775. 00 |
| திரு தங்கராஜா குடும்பம் | ஜேர்மன் | 8775. 00 |
| திரு மகேந்திரராஜா குடும்பம் | ஜேர்மன் | 2457. 00 |
| சு. தியாகராஜா நினைவாக | கொக்குவில் | 30000. 00 |
| ஆ. ரஜீவன் | ஆனைக்கோட்டை | 500. 00 |
| R. ராசராகுலன் | பிரான்ஸ் | 2000. 00 |
| க. கமலவேணி | நீர்வேலி | 900. 00 |
| வி. சந்திரசேகரம் | கொழும்பு | 5000. 00 |
| பே. ரோகிணி | உரும்பராய் | 1புட்டி வெங்காயம், 2புட்டி பருப்பு, 1மூடை அரிசி |
| A. அனுஷாந்தன் | சங்கானை | 2000. 00 |
| பூ. ஜெயமலர் | சங்கானை | 1100. 00 |
| சுஜீபா பகீரதன் | சண்டிலிப்பாய் | 8000. 00 |
| இ. தயாநிதி | கிளிநொச்சி | 1000. 00 |
| S. தூயன் | ஊரெழு | 1000. 00 |
| அ. சோமசுந்தரம் | தெல்லிப்பழை | 1000. 00 |
| ப. அம்பிகாதேவி | தெல்லிப்பழை | 2000. 00 |
| S. சுகந்தினி | சிறுப்பிட்டி | 1000. 00 |
| ச. சசிகரன் | கரவெட்டி | 500. 00 |
| S. சுபாங்கன் | நவாலி | 5000. 00 |
| ஜெயராஜ் அவநாஸ் | பிரான்ஸ் | 10000. 00 |
| ச. யோகாம்பிகை | யாழ்ப்பாணம் | 500. 00 |
| க. மணிவண்ணன் | மானிப்பாய் | 1000. 00 |
| சு. தையல்நாயகி | கல்வியங்காடு | 500. 00 |
| கோ. கணேஸ்வரன் | அச்சுவேலி | 25000. 00 |
| வி. செந்தூரன் | அல்வாய் | 1000. 00 |
| து. ஜெகதீஸ்வரன் | சாவகச்சேரி | 2500. 00 |
| சி. சந்திரசேகரம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| அ. ஞானப்பிரகாசம் | திருநெல்வேலி | 2000. 00 |
| நா. உமாபதி | கொக்குவில் | 5000. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுவகைச் சமயங்கள்

– திரு இராம ஜெயபாலன் அவர்கள் –

ஒருவர் பல பெயர்களால் அழைக்கப்படுவதும் பலர் ஒரே பெயரில் அழைக்கப்படுவதும் இருவேறு இயல்புகள். முதலாவதில் முரண்பாடுகள் இருக்க முடியாது. இரண்டாவதில் முரண்பாடுகள் இருக்கும். இந்தவகையில் ஆறுவகைச் சமயங்கள், தனித்துவம் வாய்ந்த ஆறுவகை இயற்கை வழிபாடுகள் தனித்தனியாக இறைவனாகப் போற்றப்பட்டாலும் சகோதரத் துவத்துடன் ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது.

மேலும் ஆறுவகைச் சமயங்களில், ஐந்து வகைச் சமயங்கள், ஐந்து நிலப் பண்புகளை பிரதிபலிக்கின்றன. ஒரு காலத்தில் மொழி, குறிப்பறிதல்களால்தான் அதிகம் உணர்த்தப்பட்டது. உதாரணம் மரம், கொடி, செடிகள், விலங்கு, பறவைகள் தவிர இயற்கை காட்சிகள் வாயிலாகவும் நிலங்களை வேறுபடுத்திக்காட்ட உத்திகள் பயன்படுத்தப்பட்டது. இந்தவகையில் மரம் கொடி செடிகளை பூக்களால் தனித்துவப்படுத்தி, நிலங்களை பூக்களின் பெயர்களால் அழைக்கப்பட்டது. தவிர பூமி என்ற சொல்லும் பூ மகா தேவி என்ற சொல்லடியில் இருந்தே பிறந்துள்ளது. இந்தவகையில் நிலப்பண்பின் அடிப்படையில் சமயங்களை ஆய்வு செய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

## குறிஞ்சி

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சிப் பூவால் அழைக்கப்படுகின்றது. அடுத்ததாக மலைவாழ் மக்கள் நெருப்பைக் கண்டுபிடிக்க முன்னர், நிலத்தில் இருந்த தமது முன்னோர்களின் உடலை புதைக்க முடியாமையால், பறவைகளுக்கு உணவாக வீசி விடுவார்கள். பின்னர் இறந்த தமது முன்னோர்களுக்கு பிதிர்க்கடன் செய்ய காகத்தையும் கழுகையும் வழிபட்டார் கள். இதன் தொடர்ச்சிதான் மலைகளை குறிப்பதற்கு சேவலும் மயிலும் பயன்படுத்தப்பட்டது. மேலும் மயில் மலைகளையும், சேவல் மலை சார்ந்த இடத்தையும் குறிக்கவும் பயன்படுத்தப் பட்டது. இங்கேதான் முருக வழிபாடு உருவானது. ஆனாலும் முருகன் ஐந்து நிலங்களையும் தவிர சூரிய வழிபாட்டையும் இணைத்து ஆறுமுகனாக ஏக இறைவனாகப் போற்றப்பட்டான்.

இந்த வகையில் கந்தபுராணத்தில் முருகனின் விஸ்வரூப தரிசனத்தில் மலை சார்ந்த இயற்கை காட்சியே காட்டப்பட்டும் உள்ளது. அதாவது மலையில் நின்று பார்க்கும்போது வானம் எவ்வாறு அழகாகத் தெரியுமோ அவ்வாறே முருகனின் இறை தத்துவமும் தனித்துவப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

## நெய்தல்

கடலையும் கடல் சார்ந்த இடத்தையும் குறிப்பதாக நெய்தல் பூ விளங்குகின்றது. தவிர மீன் கடலையும் ஆமை கடல் சார்ந்த இடத்தையும் குறிக்கவும் பயன்பட்டும் இருக்கின்றது.

*புத்திசாலி ஒருமுறைதான் ஏமாற்றப்படுகிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவகையில் விஸ்ணு புராணத்தில், விஸ்ணுவின் விஸ்வரூப தரிசனத்தில் கடல் சார்ந்த இயற்கைக் காட்சியே காட்டப்பட்டும் உள்ளது. அதாவது கடல் நிலம் வானம் ஆகிய முப்பரிணாமம் காட்டப்பட்டும் உள்ளது.

தவிர விஸ்ணுவின் அவதாரங்களாக சூரிய வம்சத்தை பிரதிபலிக்கும் ஸ்ரீ ராமரும், சந்திர வம்சங்களை பிரதிபலிக்கும் ஸ்ரீ கிருஷ்ணரும் காட்டப்பட்டுள்ளமையால், விஸ்ணு பெருமானே ஏக இறைவனாகவும் காட்டப்பட்டும் உள்ளார்.

**முல்லை**

தமிழ் இலக்கியப் பாடல்களில் மாயவனே முல்லை நிலத்துக்கு உரியவனாக காட்டப்பட்டுள்ளது. மகாபாரதத்தில் யமதருமரின் அருளாலேயே பாண்டுவுக்கு மூத்தமகன் பிறந்ததாகக் காட்டப்பட்டுள்ளமையால், தருமரும் இந்த நிலத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றார். தவிர திருஞானசம்பந்தரின் பாடல்கள் மூலம் சிவபெருமானும் இந்த நிலத்துக்குரியவராகவே கருதவும்படுகின்றார்.

எனவே மனிதன் நெருப்பை கண்டுபிடித்து காட்டை அழித்து புல் தரைகளாக்கி, விலங்குகளை வளர்த்து உழைத்து வாழக்கற்றுக்கொண்ட காலத்தில் வளர்ப்பு பிராணிகளே முக்கிய உயிரினங்களாக முல்லை நிலத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றன. இந்தவகையில் எருது பசுக்கள் மட்டுமல்ல நாய்களும் வளர்ப்பு பிராணிகளாக விளங்குவதால், வைரவர் வீரபத்திரர் ஆகிய தெய்வங்களும் இந்த நிலத்தைச் சார்ந்தவர்களாகக் கருதவேண்டியும் உள்ளது.

தவிர சிவபெருமானின் விஸ்வரூப தரிசனத்தில் நிலம் நெருப்பு வானம் இந்த நிலப்பண்புக்குரிய இயற்கை காட்சியாகவே காட்டப்பட்டும் உள்ளது. மேலும் சிவபெருமானே மற்றைய நிலத் தெய்வங்களுக்கும் தந்தையாக காட்டப்பட்டு, ஏக இறைவனாகவும் காட்டப்பட்டும் உள்ளார்.

**பாலை**

சிங்கம், புலியுள்ள பாலை மரங்கள் நிறைந்த அடர்ந்த காடே, பாலை என அழைக்கப்பட்டாலும், வரண்ட மணல் நிலங்களும் பாலை வனங்கள் என்றே மொழியகராதியில் அழைக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் ஐந்து வகை நிலத்தில் முதன்மை நிலமாக மனித நாகரீகத்தின் தோற்றுவாயாக இந்த நிலம் கருதப்படுவதால் தாய் வழிபாடு இங்கேயே உருவானதாகவும் நம்பப்படுகின்றது.

மேலும் இந்த நிலம் அடர்ந்த காடாக இருப்பதால் இயற்கை காட்சி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருப்பதால் தாயை சக்தியாகவும் அனைத்து இயக்கங்களுக்கும் மூலமாகவும் பார்க்கப்படுகின்றாள் தவிர அலைமகள் கலைமகள் மலைமகள் என தாய் போற்றப்படுவதால் தாயின் விஸ்வரூப தரிசனங்களில் மற்றைய நிலங்களின் பாதிப்பும் இருக்கின்றது.

மேலும் தாயே நிலங்கள் அனைத்தையும் இணைக்கும் பூ மகா தேவியாகவும் போற்றப்படுவதால் பூமியும் தாயாகவே பார்க்கப்படுகின்றாள்.

*ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை. முயற்சி இல்லாத ஆசையால் பயனில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மருதம்**

தமிழ் இலக்கியங்களில் இந்திரனே மருத நிலத் தெய்வமாக வர்ணிக்கப்படுகின்றான். மேலும் இந்திரனுடைய வாகனமே பிள்ளையாரின் தலையாக புராணங்களில் சொல்லப் படுவதால், பிள்ளையாரே மருதநிலத் தெய்வமாகவும் விளங்குகின்றார். இந்த வகையில் வயல் நிலங்களில் இருக்கும் கரும்பை யானை அதிகம் விரும்பிச் சாப்பிடுவதாலும் எலியும் வயல் நிலங்களில் விளையும் தானியங்களை விரும்பி உணவாக்குவதாலும் எலியும் யானையும் வயல் நிலங்களில் வாழும் முக்கிய உயிரினங்கள் என்பதாலும் மருத நிலத்தை எலியும் யானையும் பிரதிபலிப்பதால் பிள்ளையாரே மருதநில தெய்வம் என்பது எந்த சந்தேகத்திற்கும் இடமின்றி உறுதியாகின்றது.

விநாயகரின் விஸ்வரூப தரிசனத்தில் நிலத்தின் மகிமையை உணர்த்தவும் உணவின் மகிமையையும் உணர்த்தவும் விநாயகரின் வயிற்றிலேயே கோள்கள் காட்டப்பட்டும் உள்ளது. தவிர எல்லா நிலங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் சக்தியின் புத்திரனாகவும் திகழ்கின்றார்.

**தெளிவுரை**

அறுவகைச் சமயங்களில் சூரியனை வழிபடும் சமயத்தை தவிர மிகுதி ஐந்து நிலங்களை வழிபடும் தெய்வங்களே அந்தந்த சமயங்களின் முழுமுதல் கடவுளாகவும் தவிர இயற்கையாகவும் இறைவனாகவும் போற்றப்படுகின்றனர். தவிர எல்லா சமயங்களிலும் அந்தந்த தெய்வங்கள் பல பெயர்களால் அழைக்கப்படுவதால் பல நோக்கங்கள் அவற்றுள் இருக்கிறது.

ஒரு கோவிலின் மூலவர் எப்படி முதன்மையானவரோ அவ்வாறே அந்தந்த கடவுளின் புராணங்களில் அந்தந்த கடவுள்களே முதன்மைப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். ஆனாலும் பிள்ளையார் நந்தியில் பிறந்தாலும் நிலங்களில் முக்கியத்துவம் வாய்ந்த நிலத்தை பிரதிநிதித்துவப் படுத்துவதாலும் படைகளிலே யானைப் படையே முன்னுக்கு வருவதாலும், பிள்ளையாருக்கு சில முக்கியத்துவங்கள் இருந்தாலும் புராணங்கள் எல்லாமே, அந்தந்த கடவுள்களையே முதன்மைப்படுத்தியுள்ளமை புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

எவ்வாறாயினும் ஆறுவகைச் சமயங்களின் சாரம்சமும் இயற்கையே இறைவன் என்பதையே சுட்டி நிற்கின்றது.

---

இளைஞர்களே எல்லோர் உள்ளத்திலும் கருணை நிறைந்து இருக்கின்றது. தீர்க்க முடியாது என்று நீங்கள் நினைக்கும் பிரச்சினைகள் பலவற்றின் தீர்வு, உங்கள் மேல் பரிவுகொண்ட பலரிடம் இருக்கிறது. அவர்களை அணுகி உதவியை ஏற்றுக்கொள்ள வேண்டியது உங்கள் கடமை. எந்த நிலையிலும் நம்பிக்கையை இழந்துவிடாதீர்கள். காற்றாலும் (பிராணவாயு), உணவாலும்தான் நீங்கள் உயிருடன் இருக்கின்றீர்கள். ஆனால் நம்பிக்கையினால் மட்டுமே வாழ்கின்றீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். “என்னால் எதுவுமே முடியாது” இது கோழைத்தனம். “என்னால் எல்லாமே முடியும்” இது அகங்காரமான முட்டாள்தனம். “எது என்னால் முடிய வேண்டுமோ அதனைச் செய்து முடிக்கக் கடவுளின் கருணையும் இருந்தால் என்னால் முடியும்” என்பதே சரியான வாழ்க்கைத் தத்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி....

# ஆனந்த சாகரம்

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள் –

## துர்க்கா தேவி

துர்க்கம் என்பதற்கு கோட்டை என்று பெயர். பகைவர்கள் நம்மை அண்டவிடாமல் கோட்டையாக நின்று நம்மைக் காப்பாற்றுபவளே துர்க்கை. உபாஸகனது அகங்காரத்தையும், அசுர குணத்தையும் அழிக்கும் ரௌத்ர ஸ்வரூபிணியே துர்க்கை. மனிதனது துயர் நீக்கும் ரோக, சோக, தாப நிவாரணி.

கிருஷ்ணாவதாரத்தில், வசுதேவரிடம் இருந்த பெண் குழந்தையை கம்ஸன் பிடுங்கிய போது, அக்குழந்தை ஆகாயத்தில் பாய்ந்து காளியாகத் தோன்றினாள். கண்ணன் வளர்ந்த கோகுலத்தில் தோன்றியதால் துர்க்கையாகிய அவள் கண்ணனின் சகோதரியாகக் கருதப்படுகிறாள்.

இந்திரனின் பதவியைக் கைப்பற்றி தேவர்களைத் துன்புறுத்தினான் மகிஷாசுரன். அவனை அழிப்பதற்காகத் திரிமூர்த்திகள் உள்ளிட்ட அனைத்து தேவதைகளிலுமிருந்து எழுந்த ஒளி சேர்ந்து பெண் உருவமாகத் தோன்றியவளே அஷ்ட தசபுஜ மகாலட்சுமி. அவளே மூன்று குணங்களின் வடிவான ஆதிசக்தி. மகாலட்சுமி, மஹா காளி, மஹா சரஸ்வதி என்ற மூன்று சக்திக்கும் மூலமானவளே மூலதுர்க்கா.

துர்க்கையின் வாகனங்களாகிய மகிஷமும், சிங்கமும் காம குரோதங்களைக் குறிப் பிடுகின்றன. இவற்றை அழித்து சூலமாகிய ஞானத்தைப் பெற்று பரப்பிரம்மமாகிய துர்க்கையைச் சேர்வதே துர்க்கை வழிபாடு.

சக்தியை வழிபடுபவர்கள் சாக்தர்கள். "மாத்ரு தேவோ பவ" அதாவது தாயுருவில் வழிபாடு என்று வேதம் கூறுகிறது. தேவி சக்தியின் அம்சங்கள் ராஜராஜேஸ்வரி, பாலை, புவனேஸ்வரி, லலிதா, துர்க்கை என்ற ஐந்து நிலைகளாகும். சிவசக்தியின் ஐக்கியத்தையே பராசக்தியாகிய ராஜராஜேஸ்வரியாக வழிபடுகின்றனர். அந்த ஐக்கிய ரூபிணியின் இளமைப் பருவமே பாலை. புவனேஸ்வரி என்பது சக்தியின் குமரிப் பருவமே. அருளும், பொருளும், ஞானமும் பெற்று உயர்ந்து விளங்குகின்ற உபாஸகனுக்கு அருளை வாரி வழங்குபவளே லலிதா. ஆகமங்கள் ஒன்பது விதமான (நவதுர்க்கா) துர்க்கையைக் குறிப்பிடுகின்றன. நவதுர்க்கா தேவியரைப் போற்றி வழிபடுகிறவர்களுக்கு பயம், பிணி, துக்கம் ஆகியவை அகலும். சாந்தியை அளித்து ஸம்ஸார சாகரத்தில் இருந்து பக்தர்களைக் கரையேற்றி காப்பவள் ஸ்ரீ துர்க்காதேவி.

சாயாக்கிரமமாகக் கருதப்படும் ராகுவுக்கு அதிதேவதை துர்க்கை ராகு காலத்தில் துர்க்கையை வழிபடுவதால் ராகு ப்ரீதியடைந்து தன்னால் ஏற்படும் பாதகங்களின் தீவிரத்தைக் குறைக்கிறார்.

மங்கையர்கள் சிவாலயம் சென்று துர்க்கையம்மன் சந்நிதியில் ஒரு எலுமிச்சம் பழத்தை இரண்டாக்கி, அதன் சாறை ஸ்ரீ துர்க்கையம்மனின் பாதத்தில் பிழிந்துவிட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தோல்களைத் திருப்பிக்கொண்டு ஓர் அகல்போல் செய்து, அவை இரண்டிலும் நெய் அல்லது நல்லெண்ணெய் ஊற்றி திரிபோட்டு தீபம் ஏற்றி, அலரி மலர்களால் அலங்கரித்து வழிபட ஞானத்தைப் பெறலாம். அர்ச்சனை செய்து வழிபட விரும்பிய வரங்களை அம்பாள் அருள்வாள். வெள்ளி, செவ்வாய் அல்லது ஞாயிற்றுக்கிழமை ராகு கால நேரத்தில் விளக்கு போட வேண்டும். தொடர்ந்து பதினொரு செவ்வாய்க் கிழமைகள் விளக்கேற்றி வழிபட நினைத்த காரியம் நடைபெறும். வேண்டுவோர்க்கு விரும்பியவற்றை எல்லாம் துர்க்கை அம்மன் வழங்குவாள். திருமணம் நடைபெற, வேலை கிடைக்க, நோய்களிலிருந்து பூரண குணம் அடைய, வறுமை நீங்க, பதினாறு பேறும் பெற அன்னை அருவியென அருளைப் பொழிவாள். துதிப்பவர் நெஞ்சில் நீங்காது நின்று காத்திடுவாள். யாதுமாய், அனைத்துமாய் நின்று ஞான அருள் சுரக்கும் அம்பிகையாகிய துர்க்காதேவியை சரணடைந்து சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு வாழ்வோமாக.

ஜெய ஜெயதேவி ஜெய ஜெயதேவி துர்க்காதேவி சரணம்!
துர்க்கையம்மனைத் துதித்தால் என்றும் துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயும் அவளைத் தரிசனம் கண்டால் போதும்
கர்மவினைகளும் ஓடும் சர்வமங்களம் கூடும்.
(ஜெய ஜெய)

பொற்கரங்கள் பதினெட்டும் நமைச் சுற்றிவரும் பகைவிரட்டும்
நெற்றியிலே குங்குமப் பொட்டும் வெற்றிப் பாதையைக் காட்டும்
ஆயிரம் கண்கள் உடையவளே ஆதிசக்தி அவள் பெரியவளே
ஆயிரம் நாமங்கள் கொண்டவளே தாய்போல் நம்மைக் காப்பவளே
(ஜெய ஜெய)

சங்கு சக்கரம் வில்லும் அம்பும் மின்னும் வாளும் வேலுடன் சூலமும்
தங்கக் கைகளில் தாங்கி நிற்பாள் சிங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள்
திங்களை முடிமேல் சூடிநின்றாள் மங்கல வாழ்வும் தந்திடுவாள்
மங்கையர்க்கரசியும் அவளே அங்கயற் கண்ணியும் அவளே.
(ஜெய ஜெய)

## கேதாரகௌரி விரதம்

எல்லாம் வல்ல கேதாரநாதரைக் குறித்து அனுஷ்டிக்கும் சிறந்த விரதம் கேதாரகௌரி விரதம். மிகுந்த மகிமையும், மகோன்னதமும், புனிதமும், புண்ணியமும் நிறைந்த விரதம். கேட்பது கிடைக்கச் செய்யும் அருமையான விரதம். சிவபெருமானை கேதாரநாதர் என்ற அம்சத்தில் அம்பிகை அனுஷ்டித்த இந்த விரதம் புரட்டாதி மாதத்து சுக்லபட்சத்து தசமி முதலாக ஐப்பசி மாதத்து கிருஷ்ணபட்சத்து தீபாவளித் திருநாளான அமாவாசை வரை இருபத்தொரு நாட்கள் அனுஷ்டிக்கப்படும்.

தனக்கு நல்ல புனிதமான மாங்கல்யத்தைத் தந்து இல் வாழ்க்கைச் சிறப்பைத் தந்த கணவர் சகல செல்வங்களுடன் ஆயுட்பலம் பெற்று நீண்டநாள் வாழவேண்டும் என சுமங்கலிப்

*நேற்றைய பொழுதும் நிஜமில்லை. நாளைய பொழுதும் நிச்சயமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களும் தனது வாழ்க்கைத் துணையான மனைவியும் நலமாக வாழவேண்டும் என ஆண்களும் அனுஷ்டிக்கும் விரதமாகும்.

21 நாட்களும் புனித புண்ணிய நீராடி தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து சந்தியா வந்தனம் முடித்து சிவாலய தரிசனம் செய்து வில்வத்தினால் சிவலிங்கத்துக்கு அர்ச்சனை செய்து இருபத்தொரிழையினால் ஒரு நோன்பு நூல் முடித்து, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முடிச்சாக இருபத்தொரு முடிச்சுப்போட்டு இறுதிநாள் அதனைக் கையில் கட்டிக்கொள்ள வேண்டும். இந்த நோன்புக்கயிறு பூஜையில் சுவாமியின் பாதத்தில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் கட்டவேண்டும். ஒவ்வொரு நாளும் அம்பிகையின் பாடல்களைப் பாடி கௌரிக்காப்பு ஓதிய பின்பே மதிய போசனஞ் செய்யவேண்டும்.

ஒருமுறை கயிலைமலையில் சிவனும், சக்தியும் வீற்றிருக்கையில் சர்வமும் சிவமயமே என்ற கொள்கையுடைய பிருங்கி முனிவர் வந்து வழிபட்டார். அவர் சிவனை மட்டுமே வண்டுருத்தாங்கி வலம் வந்து பிரதட்சணம் செய்து வணங்கி உமையம்மையை வணங்காமல் சென்றார். உமை அம்மை "நாதரே எல்லோரும் நம் இருவரையும் வணங்கும்போது இந்த முனிவர் என்னை வணங்காத காரணம் என்ன?" எனக் கேட்டார். அதற்கு சிவபெருமான் "உமையே! பிருங்கி முனிவருக்கு உலக இன்பங்கள் தேவையில்லை. சிவம் மட்டுமே பரம்பொருள் எனக் கருதுபவர். அதனால் அவர் உன்னை வணங்கவில்லை" என்றார்.

உமையம்மை பிருங்கி முனிவரிடம், "ஓ முனிவரே! உமது உடம்பிலுள்ள இரத்தம், இறைச்சி அனைத்தையும் தாரும்" என வாங்கிக்கொண்டார். முனிவர் நிற்க முடியாமல் தள்ளாடினார். சிவன் அவருக்கு ஊன்றுகோலைக் கொடுத்தார். அதனால் கோபம் கொண்ட சக்தி பூலோகம் வந்து கௌதம முனிவரின் ஆச்சிரமத்தில் ஓர் வில்வமரத்தடியில் அமர்ந்திருந்தார். அப்போது கௌதமர் தாயே! நீங்கள் இங்கு வந்த காரணம் யாது?" எனக் கேட்டார். அம்பிகை நடந்தவற்றைக் கூறினார். கௌதமர் அம்பிகையைச் சமாதானப்படுத்தி "அம்பிகையே! தாங்கள் கேதாரகௌரி விரதமிருந்து மீண்டும் சிவனை அடையவேண்டும்" என வணங்கி நின்றார். அம்பிகை முனிவரிடம் அந்த விரத முறைகளைக் கேட்டறிந்து அவ்வாறே நோற்று ஈசனின் இடப்பாகத்தைப் பெற்றார். பார்வதி சிவனுடன் சேர்ந்தே இருந்தால் இந்த முனிவர் சிவனை மட்டும் எப்படி வணங்கமுடியும் என்று சிவனுடன் இணைந்தே இருக்க அனுஷ்டித்த விரதம். அர்த்தநாரீஸ்வரரான சிவனிடம் இந்த விரதத்தை நோற்பவர்களுக்கு சகல சௌபாக் கியங்களையும் வழங்கவேண்டும் என அன்னை கேட்க, எம்பெருமானும் அவ்வாறே விரதம் இருப்போருக்கு அருள்புரிகின்றார். இவ்விரதம் இருப்போர் அம்மன் கோவில்களில் வழிபாடு செய்து இருபத்தொரு வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, சந்தனம், குங்குமம், வெல்லம், அதிரசம் என்பவற்றை நிவேதித்து உபவாசம் இருந்து இருபத்தோரிழையிலான நோன்புக் கயிற்றைக் கட்டி தேவார திருமுறைகளைப் பாராயணம் பண்ணி மறுநாள் காலை உதயத்தின் முன் பாறணை பண்ணலாம்.

கௌரி நோன்பு விரதங்களில் சிறந்தது. சக்தி விரதங்களில் மகத்துவம் மிக்கது. இந்த மகிமை வாய்ந்த விரதத்தை நோற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக.

*சிறிதளவு உள்ளவன் ஏழையல்ல. ஆசை அதிகம் உள்ளவனே ஏழை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயேனையும் இங்கொரு பொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய் நின்னை உள்ள வண்ணம்
பேயேன் அறியும் அறிவு தந்தாய் என்னபேறு பெற்றேன்
தாயே மலைமகளே செங்கண்மால் திருத் தங்கைச்சியே. (தொடரும்...

## என்றும் வற்றாத ஊற்று சந்நிதியான் ஆச்சிரமம்

இயற்கை ஊற்றுக்களில் சில மழை இன்மையினால் வற்றிப்போகின்றது. ஆனால் சந்நிதியான் ஆச்சிரம ஊற்று, மக்கள் பணமும் பொருளும் வாரி வழங்குவதால் வற்றாது ஓடுகின்றது. சந்நிதியான் ஆச்சிரம சேவையை மக்கள் மிகவும் போற்றுகின்றனர். தன்னலம் கருதாது, சாதி மதம் பாராது இடர் ஏற்படும் இடங்களுக்கு சென்று, இரவு பகல் பாராது சேவையாற்றுகின்றார். மலைநாட்டில், மண்சரிவு - வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது, உணவுப் பொருள்களும், உடுதுணி, போர்வைதுணி, பாய் கொடுத்து, எல்லாம் இறைவன் படைத்த உயிரினங்கள் என எண்ணி, அவர்கள் துயர்துடைக்கின்றார். உணவு இன்றி வருந்தும் கிராமங்களுக்குச் சென்று உணவுப்பொருள்கள் வழங்குகிறார். பாடசாலையில் கல்விகற்கும் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்குகின்றார். என்றும் வற்றாத ஊற்று சந்நிதியான் ஆச்சிரம ஊற்று என்று கூறினால் மிகையாகாது.

சந்நிதியான் ஆச்சிரமம் செல்வச்சந்நிதியான் கண்பார்வையில் இருப்பதினால் மோகனதாஸ் சுவாமிகள் ஈர்க்கப்பட்டு. தன்வயமின்றி ஆடிக்கொண்டிருக்கிறார். சந்நிதியான் ஆலயத்தில் ஏதிலிகளாக மடங்களில் தங்கியிருப்பவர்களுக்கு மூன்று நேர உணவுகளையும், தேனீர் போன்றவற்றையும் வழங்குவதோடு மட்டுமல்லாமல் உடுதுணி, போர்வைகளும் வழங்கு கின்றார். கண்பார்வை குறைவுடையவர்களுக்கு மூக்குக்கண்ணாடி வழங்குகின்றார். இவர்களுக்கு நோய் ஏற்படும்போது கிழமைக்கொருநாள் வைத்தியரை அழைக்கின்றார்.

நாள்தோறும் சந்நிதியான் ஆலயம் வந்து வழிபட்டுவரும் அடியவர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்குகின்றார். அன்னதானம் வழங்குமுன், சமய சொற்பொழிவுகளையும், கலை, கலாசாரம் பேணும் நிகழ்வுகளையும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் நடைபெறு வதைக் காணலாம். கலைஞர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தலும் துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வுகளும் நடைபெற்று சந்நிதியான் ஆச்சிரம பூசை அறையில் பூசை நடைபெற்று விபூதி வழங்கியபின் அன்னதானம் வழங்கப்படும். சிவபுராணம் ஓதப்பட்டு, முருகன் வழிபாட்டுப் பாடல்கள் சுவாமியால் ஓதி நிறைவடைந்த பின் அடியார்கள் அன்னதானத்தை அமைதியாக இருந்து புசிப்பார்கள். சந்நிதியான் ஆச்சிரம ஞானச்சுடர் நூல் வெளியீடு செய்யும்போது அதனையும் பெற்றுச் செல்வார்கள். ஞானச்சுடர் மாதம் ஒருமுறை வெளியீடு செய்யப்படுவதை மக்கள் அறிவர். ஞானச்சுடரில் கட்டுரைகளுடன் மாதச் சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம், நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் அச்சிடப்பட்டு வழங்கப்படுவதால், உதவி வழங்குவோர் தொகைப் பணத்தையும், பொருளையும் கொடுத்து உதவுகிறார்கள். கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளின் சேவையை போற்றாதவர்கள் இல்லையெனத் திடமாகக் கூறலாம். அவரின் சேவை பல்லாண்டு காலம் தொடர வேண்டும். சந்நிதியான் அருளால் நோயற்றவராகவும், பல்லாண்டு காலம் வாழ சந்நிதியான் அருளை மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

*எந்த செயல் செய்யும்போதும் திறமை என்ற ஒன்றைமட்டும் வளர்த்துக்கொள்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதயாத்திரை

**– சந்நிதியான் ஆச்சிரமம் –**

கதிர்காம வேலவனுடைய உற்சவம் ஆரம்பமாவதற்கு முன்னோடியாக அனைவரின் கவனத்தையும் முருக சிந்தனையையும் உள்வாங்குவது கதிர்காம உற்சவத்துக்கென ஆரம்பிக்கப்படும் அடியார்களின் பாதயாத்திரை என்றால் மிகையாகாது.

இப் பாதயாத்திரை இன்று நேற்றல்ல பல வருடங்களுக்கு முன்பிருந்தே ஆரம்பிக்கப்பட்டு வருடா வருடம் நடைபெறும் ஒரு பக்திபூர்வமான நிகழ்வு என்றே சொல்லலாம். நாம் அறிந்த வகையில் சுவாமி கௌரிபாலா (ஜேர்மன் சுவாமி) அவர்களது வழிகாட்டுதலில் பல அடியார்கள் ஒன்று சேர்ந்து ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பித்து 45 நாட்களுக்கு மேலாக யாத்திரையில் ஈடுபட்டு சுமார் 65 ஆலயங்களைத் தரிசித்தும், தங்கியும் கதிர்காம கொடியேற்ற தினத்தில் ஆலய முன்றலில் தமது பாதயாத்திரையை நிறைவு செய்வார்கள்.



சந்நிதியிலிருந்து மிகக் குறைந்த அளவில் புறப்பட்ட அடியார்கள் கூட்டம் கதிர் காமத்தை அடையும்போது பல நூற்றுக்கணக்கான அடியார்களோடு "அரோஹரா" என்னும் உத்வேக கோஷத்துடன் கதிர்காம வாசலை அடைவது என்பது சொல்லுந்தரமன்று. நேரிலே அதனுடன் இணைந்த அன்பர்களது அநுபவ வாயிலாக அறியக்கூடியதாக உள்ளது.

*உன்னால் முடியும் என்று நம்பு. முயற்சிக்கும் அனைத்திலும் வெற்றியே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில் இவ்வருடமும் கதிர்காம உற்சவத் திற்குரிய பாதயாத்திரை செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் திலிருந்து வழமைபோன்று ஆரம்பிக்கப்பட்டது. அன்று காலை ஸ்ரீ செல்வச்சந்நிதி வேலவனது பூசை வழிபாடு களைத் தொடர்ந்து யாத்திரைகளுக்கு அடையாளமாக அடியார்களால் கொண்டு செல்லப்படும் வேல், கொடி முதலியவைகளை முருகன் காலடியில் வைத்து எடுத்துக் கொண்டு முருகநாம பஜனையுடன் ஆலயத்தை வலம் வந்து வழமைபோன்று சந்நிதியான் ஆச்சிரமத்தை அடைவார்கள். ஆச்சிரம வாயிலில் அவர்களை வரவேற்ற பின் அவர்களால் கொண்டுவரப்பட்ட வேல், கொடிச் சீலைகள் முதலியவற்றை ஆச்சிரம பூசை அறையில் வாங்கி வைத்துவிட்டு வருகின்ற அடியவர்கள் அனைவருக் கும் காலை உணவும் தேநீரும் வழங்குவார்கள்.



உணவுச் செயற்பாடு முடிந்து யாத்திரை புறப்படும் போது ஆச்சிரம சுவாமிகள் அடியார்கள் அனைவரையும் ஒவ்வொருவராக பூசை அறையுள் அழைத்து அவர்களுக்கு விபூதி இட்டு வழிச் செலவுக்காக ஒருதொகை நிதியளித்து



இறுதியாக அவர்கள் கையில் வேலையும் கொடி முதலிய பொருட்களையும் கையளித்து அவர்களை ஆச்சிரம வாயில் வரை வந்து அரோஹரா எனும் கோஷத்துடன் வழியனுப்பி வைப்பார். அடியார்களை அனுப்புவதோடு மட்டும் ஆச்சிரம சுவாமி அவர்களின் பணி


*எதிர்காலம் உள்ளங்கை ரேகையில் இல்லை. உன் உள்ளத்தில் உள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவடைவது இல்லை. அடியார்கள் எங்கெங்கு தங்கி நிற்கின்றார்கள் என்று அறிந்து





அவர்களை நேரில் சென்று பார்த்து அவர்களுக்கு வேண்டிய பொருட்களை வழங்குவதோடு உகந்தை வரை சென்று அவர்களுக்கு வேண்டிய பொருட்களை வழங்குவதில் சந்நிதியான் ஆச்சிரமம் பின்நிற்பதில்லை.

தன்னில் தானே மகிழ்பவனை தீமையான ஆயுதங்கள் தொடுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதோட்ட மன்னவனே அருளிடுவாய்!

– திருமதி இந்திரா திருநீலகண்டன் அவர்கள் –

பாதி மதியுடன் பாவை கங்கை தனைச் சிரஞ்சூடி
கீத மிசைத்திடும் ஓதுவார்சூழ் மாதலமாம்
கேதீஸ்வர புலத்தில் அன்னை பார்வதியுடன்
ஆதிசிவன் அமர்ந்தார் விரும்பி.

ஆடிமகிழும் மயிலினமும் இனிதாய்க்கூவும் குயிலினமும்
நாடிமலரில் தேனருந்தி நன்றேவாழும் வண்டினமும்
விரும்பியெங்கும் உலாவந்து இரைமீட்கும் பசுவினமும்
உன்னதமாய் அனைத்துயிரும் களித்துறங்கும் சூழலிலே
பாலாவிக் கரையினிலே இயற்கையன்னை மடியினிலே
திருமுழுக்காடி மகிழும் மாதோட்ட மன்னவனே!
திருக்கேதீஸ்வரத்தானே! கௌரி அம்மை நாதனே!
உருகி நினைவார் தம் உள்ளத்து உறைவோனே.

கரும்புதரு சுவைததும்பும் திரு அமுதாம்
"திருவாசகம் எனும் தேனை" எமக்கருளி நின்
திருவருளால் விரும்பியதைச் சுவைக்க வைத்து
அருமருந்தாய் பெருவிருந்தாய் மிளிரு மதன்
பெருமை யெலாம் உணரச் செய்து
வருந்தி நிற்கும் எமக்குமோர் ஒளிகாட்டி
கருதற்கரிய மலர்ப்பதங்கள் தொழவும் வைத்து
காத்தெமையாளும் கருணைக்கடலே காசினிக்கு காவலனே.

"மாணிக்கவாசக நின்வாசகத்தை நான்கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாற்றினிலே தேன்கலந்து பால்கலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இருக்கு" மென்ற
வள்ளலார் கூற்றுப்பாடி நின்னடியை நினைந்துருக வழிகாட்டும்
மணிவாசகர் திருவாசகம் பாரெங்கும் பரவிடவும்
மேன்மைகொள் சைவநெறி தேசமெங்கும் சிறந்திடவும்
செம்மொழியாம் எம்மொழி பூமியெங்கும் பூத்திடவும்
அருள் தருவாய் ஐயனே! ஆடல் அரசே!
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத வாராந்த நிகழ்வுகள்

02.06.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "சமயமும் ஆன்மீகமும்"

வழங்குபவர் :- திரு மீ. சிவசண்முகம் அவர்கள்

[சைவ சித்தாந்தப் பேராசிரியர், கோயம்புத்தூர், இந்தியா]

---

09.06.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"வருடாந்த வைகாசிப் பெருவிழா"

சந்நிதியான் ஆச்சிரமம்

---

16.06.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

23.06.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "மகாபாரதம்" (தொடர்)

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

[ஆசிரியர்]

---

30.06.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் ஆனி மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி) அவர்கள்

மதிப்பீட்டுரை :- திரு க. கைலைநாதன் அவர்கள்

[சைவப்புலவர், ஆசிரியர்]

306ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: **DOP/NEWS/103/2023**

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org